21

வைத்திய அட்டவணை

166

276

உப்புசாமி செட்டியார்,
காவேரிப்பட்டணம்,
வைத்திய அட்டவணை ௨
கட்டு-2.

276

## வைத்திய அட்டவணை.-2.

சுவடியின் பெயர்:- வைத்திய அட்டவணை -கட்டு.2. தேதி:- 19.2.6[illegible].

உரிமையாளரின் பெயர்:- குப்புசாமி செட்டியார், காவேரிப்பட்டணம்.

****

* இதில் முதல் 20 ஏடுகள் நாடி முறை கூறுவன. அத்துடன் சிதைந்த யிருக்கின்றன எனவே அவைகள் பிரதி செய்யாது விடப்பட்டன.

***

<u>வாத சுர நிதானம்:-</u>

முகம் கருத்திருக்கும். உதடு உலர்ந்திருக்கும். சரீரம் நோகும். தின வெடுக்கும் உஷ்ணம் போலிருக்கும். உடம்பு பாரிச்சிருக்கும். வலம் கட்டுப் பட்டிருக்கும். குளிர் வரும்.

<u>இதுக்கு மருந்து:-</u>

தழுதாழை வேர், சங்கம் வேர் விஷ்ணுகாந்தி, கடுக்காய்.உப, இது கூட்டி இரு நாழி தண்ணீர் விட்டு யெட்டிலொன்றாய்க் காய்ச்சி குடிக்க வாத சுரம் தீரும்.

<u>பித்த சுரம் நிதானம்:-</u>

நித்திரை வரும். பாயில் கிடைகொடாது. மூர்ச்சை வரும் போலிருக்கும். விக்கல் எடுக்கிறப் போலே யிருக்கும். சபத்த முண்டாயிருக்கும்.

<u>இதுக்கு கசாயம்:-</u>

கொத்தமல்லி, சதாகுப்பிறு அதிமதுரம், சுக்கு, வெட்டி வேர், ஆடாதோடை யிசுரு, கோரைக்கிழங்கு, நன்னி முட்டான் கிழங்கு, முசுமுசுக்கை வேர் இந்த ஒன்பது வகையும் சமானமாய்க் கூட்டி யிருழி தண்ணீர் விட்டு எட்டி லொன்றாய்க் காய்ச்சி இறுத்துக் கொடுக்க பித்த சுரம் தீரும்.

<u>சேத்தும சுரம் நிதானம்:-</u>

முகம் வெளுத்திருக்கும். மார்பு நோகும். விக்க லெடுக்கும். இருமல் வரும். எரைப்பெடுக்கும். உடம்பு தின வெடுக்கும். நாவுருசி தெரியாது. சுவாசம் விட்டால் வேர்க்கும். தாக மெடுக்கும். பிடரி நோகும். மேல் சுவாசம் வாங்கும்.

<u>இதுக்கு மருந்து:-</u>

கண்டங் கத்திரி வேர், சிறுகுறிஞ்சான் வேர், வெட்டி வேர், சீந்தில் தண்டு சிறு தேக்கு சுக்கு இந்த ஆறு வகையும் சரியாய்க் கூட்டி யிருழி நீர் விட்டு எட்டிலொன்றாய் காய்ச்சி கொடுக்க சேத்தும சுரம் தீரும்.

<u>அசீரண சுரம் நிதானம்:-</u>

அடிக்கடி எரைப்பு வரும். விக்கலெடுக்கும். மந்தமாயிருக்கும். புளித்த ஏப்ப மெடுக்கும். நெஞ்சு நோகும்.

<u>இதுக்கு மருந்து:-</u>

கண்டங் கத்திரி வேர், சீந்திலாங் கொடி, சுக்கு இது சமன் கூட்டி யிருழி தண்ணீர் விட்டு எட்டிலொன்றாய்க் காய்ச்சி இறுத்து திப்பிலி சுட்டு மேல் பொடி தூவி கொடுக்கவும்.

<u>அதிசார சுர நிதானம்:-</u>

அடிக்கடி வயறு போகும். அதிகமான சுரம் அடிக்கும். சரீர மெல்லாம் நோகும். வேர்க்கும். தாக மெடுக்கும். அலைச்சல் படும். குளிர்ந்த சோறு கேட்பான்.

<u>இதுக்கு மருந்து:-</u>

விலிடயம், சுக்கு, கோரைக் கிழங்கு பெரு மரத்துப் பட்டை வில்வ வேர்

னெவ், காய் ஒடு இந்த ஆறு வகையும் சமானமாய்க் கூட்டி பீருழி தண்ணீர் விட்டு
டிலொட்டிருக் கூட்டி காய்ச்சி கொடுக்கவும்.

சுரம் நிதானம்:-

குமார கண்டன் போல வலிக்கும். சுரம் வந்தவுடனே பிரலாபிக்கும். கண்ணை உருட்டி முழிக்கும். தலை மயிரெடுத்திருக்கும். பாடுவான் ஆடுவான் நடுக்கல் வரும். பாலும் சோறும் வேண்டியிருக்கும். நித்திரை வரும். இது அசாத்தியமானது.

தொந்த சுரம் ஆறுக எனப்படும். அது யாதெனில் வாத பித்த தொந்த சுரம், பித்த சேத்தும தொந்த சுரம், பித்த வாத தொந்த சுரம், சேத்தும பித்த தொந்த சுரம், சேத்தும வாத தொந்த சுரம் இந்த ஆறு வகையும் அறிந்து கொள்ளவும்.

இதுகளுக்கு கசாயம்:-

சீந்தில் தண்டு, கோரைக் கிழங்கு, சித்தா முட்டி வேர், கூத்தன் குதம்பை, நில வேம்பு, கடுக்காய், சுக்கு, பேய்புடல், கஞ்சாங் கோரை இந்த ஒன்பது வகையும் சரி யாய்க் கூட்டி பீருழி தண்ணீர் விடடு எட்டிலொன்றாய் கஷ்ச்சி கொடுக்க தொந்த சுரம் தீரும்.

சுரம் விடுகிற நிதானம். வாதசுரத்துக்கு எ நாள். பித்த சுரத்துக்கு நாள். தொந்த சுரத்துக்கு பத்து நாள் சேத்தும சுரத்துக்கு நாள் இந்த கெடுவு படி அஜீர சுரம், அதிசார சுரம், புத சுரம் இந்த ஆற வகைக்கும் கெடு வில்லை நவ சுரங்களை ஐந்துக்கும் அவிழ்தம் கொடுப்பது. இதுக்

இதுக்கு காசயம்:-

முத்தக்காசு, பற்படாகம், வெட்டி வேர், விலாமிச்சம் வேர், சுக்கு, சந்த னம் இந்த ஆற வகையும் சரியாய்க் கூட்டி பீருழி தண்ணீர் விட்டு எட்டிலொன்றாய் காய்ச்சி கொடுப்பது தாபசுரம் தீரும்.

சன்னி வாதசுரத்துக்கு கசாயம்:-

சீந்தில் தண்டு, ஆடாதோடை பீர்க்கு, நிலவேம்பு, பற்ப்டாகம், சுக்கு, சிறுகாஞ் சொறி வேர், சித்தாமுட்டி வேர் இது வெல்லாம் கூட்டி பதக்கு நீர் விட்டு நாழியாக காய்ச்சி கொடுக்க சன்னி வாதம் தீரும். இப்படி அறிந்து கொடுக்கவும்.

லிங்க சுத்தி, அவிழ்த சுத்தி, துத்த சுத்தி, நாபி சுத்தி:-

சாதிலிங்கத்தை தண்ணீர் வார்த்தரைத்து அடை போல் தட்டி சிற கலசத்தில் பசுவின் பால் வார்த்து வேடு கட்டி அதின் மேல் சட்டியால் மூடி சீலை மண் செய்து பிட்டு போல வேக வைத்து எடுக்க சுத்தியாம். எலி பாஷாணம் துணியில் முடிந்து பானையில் சுண்ணாம்பு கல் போட்டு குறணி தண்ணீர் விட்டுக் கரைத்த பின்பு அத்திரமாகட்டி எரிக்க சுத்தி யாம். துத்தம் காடியிலும் எலுமிச்சம் புளியிலும் கழுவ சுத்தியாம். நாபியை ஒரு குடுவையில் போட்டு கோமியம் விட்டு அதில் பொன்னாங்காணி சிறு கீரை இது அரைத்து பானையில் தண்ணீரில் கரைத்து பானைக்கு வேடு கட்டி பிட்டுப் போல் சுட சுத்தியாம். பிறகு பசுவின் பாலில் இதை அரைத்து நெருப்பில் சுட சுத்தியாம்.

கெந்தக சுத்தி:-

கெந்தகம் பானையில் வெள்ளாட்டுமோர் இரண்டு படி விட்டு பொன்னாங்கண்ணியும் சிறுகீரையும் இடித்து பானையில் போட்டு வொரு பானைக்கு வேடு கட்டி அதின் மேல் அரைத்த விழுதை வைத்து மேலே கெந்தகம் வைத்து மேல் சட்டி மூடி எரியிட சுத்தியாம்.

வாள சுத்தி:-

வெண்காரம், சுத்தமெருமை சாணியில் கழுவி கறண்டியில் எரித்தால் சுத்தியாம். ~ரிதாரம் பானையில் பீருழி பசும் பால் விட்டு வேடு கட்டி பொன்னாங்கண்ணி சிறு கீரை பிட்டு போல் சுட சுத்தியாம்.

மற்றிக்க சுத்தியாம். நேர்வாளம் தனியில் முடிந்த சாணி கரைத்த அதிலே சாமம் வேகப் போட்டு எடுத்த பருப்பைப் போக்கி இலையை வாங்கிப் போட்டு பிறகு சுத்தாமை சோத்தில் வேக போட்டு எடுத்த தி அதின் பிறகு சிறு கீரையில் வேக வைக்க சுத்தியாம்.

மலேசிலே சுத்தி:-

பொன்னுங்கண்ணி, சிறுகீரை இடித்த பிழிந்த பசும் பாலும் கூட்டி பானையில் விட்டு அத்திரமாக எரிக்க சுத்தியாம்.

சன்னி வாத கேசரி தயிலம்:-

வேப்ப முத்த சற்ப்ப கண்டம், மிளகு, திப்பிலி, வசம்பு, சதாகுப்பி, சித்த ரத்தை, பச்சை பாம்பு, கண்டம், கடுகுரோகணி, வட்டத் திருப்பி ஆசி மல்லிகை, மலைமந்த, தண்ணி முட்டான் கிழங்கு, கோரோசினை கிரும்பு, குங்கிலியம், நிலவேம்பு, நிலக் கடம்பஞ் பேரண்டை, முடாதேடை காட்டெருமை பால், கேவதாரி, எருக்கிலை, சார் நாழி இதில் மருந்தெல்லா மரைத்த நல்லெண்ணை நாழி வேப்பெண்ணை நாழி கூட்டி பதத்தில் வடித்த வைத்தக் கொண்டு ஒரு வேளைக்கு அரைக் கரண்டி சாப்பிடவும்.

இதில் தீரும் வியாதி வாத சன்னி, வாத சுரம், சோபை, விஷ பாகம், அத்தி சன்னி மலட்டு சன்னி, ருத்திரங்க சன்னி, மேக சன்னி இதுகளுக்கெல்லாம் மேலுக்கும் புசவும் தீரும்.

மாத்திரை:-

சாதிக்காய், சாதிக்கிரி, லவங்கம், ஏலம், திப்பிலி, மிளகு, ஜதிமரம், வாய்விளங்கம், சுக்கு, சொப்பு பொக்க இலை, கடுக்காய், மோடி சீரகம், தானிக் காய், கருஞ்சீரகம், மலை தாங்கி, புளியங் கொட்டை, மேல் தோல், இலவம் பிஞ்சி விளாம் பிஞ்சு வாழைப்பு, அரும்பு, நாக கொட்டை தென்னம் பூடை, வேலாம் பட்டை , மாம்பட்டை, நாகப்பட்டை, அரசம் பட்டை, அத்திப் பட்டை, ஆளான் விழுத இது வகைக்கு விராகனிடை.க இது வெல்லாம் கூட்டி எருமைத் தயிரில் அரைத்து ஏழு புடம் அரைத்து வைக்கவும். இது வெல்லாம் புளியங் கொட்டை மாதிரி உருண்ட பண்ணி நிழலில லர்த்தி வேப்பம் பட்டை, மாம்பட்டை, நாகப்பட்டை, அத்திப் பட்டை இது நாலும் கசாயம் வைத்த அதில் ஒரு விராகனிகட வைத்த இரண்டு வேளை சாப்பிடவும். பசரம் நிற்கும். தயிரும் சோறும் சாப்பிடவும்.

மார்நோவு, சுவாச காசம், வாத க்ஷயம், விக்கல் இருமலுக்கு லேகியம்:-

வில்வப் பட்டை இடித்த னள் பலம்.ஙய, இதை ஒரு பானையில் போட்டு நாலு மரக்கால் தண்ணீர் விட்டு எட்டி லொன்றும் காய்ச்சி வடித்தக் கொண்டு அந்த கசா யத்தில் பழைய பனை வெல்லம் பலம்.ஙய கரைத்த வடிகட்டிக் கொண்டு இளம் பதமாக காய்ச்சி அந்த பதத்தில் கடை சரக்கு சுக்கு மேல் தோல் சீவி, போட்டு பலம்.ஙு, கொடி வேலி பலம்.க, திப்பிலி பலம். செவியம் பலம். , தாலிச பத்திரி பல். சிறுநாகப்பு பலம். திப்பிலி மூலம் பலம்.உ ஏலம் காசிடை.ங, லவங்கம் காசிடை.ங, லவங்கப் பத்திரி காசிடை.ங பலம்ங, சீரகம் பல்.க கருஞ்சீரகம் பலம்.க ஆக பதி மூன்று வகை அரைத்த இடித்த வஸ்திர காயம் பண்ணி முன் கசாயத்தில் கலந்த பதமாக காய்ச்சி லேகியம் பக்குவமாய் எடுத்தக் கொண்டு தானிக்காய் பிரமாணம் கொள்ளவும். இதில் தீரும் வியாதி உஷ்ண சூலை வாதம், க்ஷயம், பயித்தியம் சுரம், விக்கல், இருமல், சுவாச காசம், மார்நோவு வாய்நீர் பாய்ச்சல் சத்தி குன்மம், வாந்தி அஜீரணம் இது வெல்லாந் தீரும்.

சுரக் குளிகை:-

கெவுரி பாஷாணம் விராகனிடை.க, வெள்ளை பாஷாணம் விராகனிடை.க, ...ரி விராகனிடை.க, ரசம் விராகனிடை.க, கெந்தகம் விராகனிடை.க, தேத்தான் விராகனிடை.க, கது நீர் புங்கம் கொட்டை விராகனிடை.க, திப்பிலி வி

வெல்லாம் கூட்டி குப்பை மேனி சார் விட்டு ஒரு சாமமரைத்து சிறு பயறு பிரமாணம் கை செய்து இஞ்சி சாற்றிலாவது சுக்கு கசாயத்திலாவது கொடுக்க சுரம் எனப் பட்டதெல்லாம் தீரும். இதற்கு பத்தியம் துவரம் பருப்பு, முருங்கைக்காய், மிளகு, நீராகும். ப, புளி விடவும். விஷத்துக்கு குப்பை மேனி சாற்றில் கொடுக்கவும். விஷம் தீரும்.

<u>சன்னிக்கு எண்ணெய்</u>:-

ஆடாதோடை சிறு சிறுப்பை; ஏலம்; கோஷ்டம், அதிமதுரம், சீரகம், கருஞ்சீரகம், உள்ளி, வசம்பு, முலைப்பால் உழக்கு முசுறு முட்டை இது வெல்லாம் ஐந்தெண்ணெயில் போட்டு காய்ச்சி வடித்து உள்ளுக்கு கொடுத்து மேலுக்கு பூசவும். அதின் பிறகு சிவப்பு பொட்டணம் கட்டி காய்ச்சி ஒத்தடம் போடவும் சன்னி தீரும்.

முசுறு முட்டை கொண்டு வந்து முலைப் பாலில் பிசைந்து புழிந்து சட்டி காய வைத்து அதில் மூலம் போட்டு வருத்து கொ---- போட்டு அந்த பாலை வத்தி இறக்கக் கொடுக்க சன்னி தீரும். அலட்டு சன்னி நெல்லு மருதான வேரும் முசுறுமுட்டை விராகனிடை.க கூட்டி அரைத்து மூன்று நாள் குடிக்க அலட்டு சன்னி தீரும். இது கை கண்டது.

<u>கழிச்சலுக்கு மாத்திரை</u>:-

இலை கடுக்காய், பிஞ்சு கடுக்காய், தானிக்காய், நெல்லிக்காய், சொம்பு பிசுப்பு செலபொன்று காய் இது அரைத்து கசாயம் காய்ச்சி காசுக் கட்டி கொட்டைப் பாக்கு இது இரண்டும் கூட்டி கசாயம் வைத்து அரைத்து கடலை பிரமாணம் உருண்டை பண்ணி வைத்துக் கொண்டு அந்த கசாயம் கொடுக்க கட்டு படும். நாயுருவி முதல் கொண்டு ஒரு வீசை நிறுத்து கத்தரித்து ஒரு பானையில் போட்டு கருக்கி மிளகு பலம்.உ, வெள்ளை சாட்டறணை வேர் பலம்.ங, வசம்பு பலம்.க இது மூன்றும்கருக்கி போட்டு கூட வெத்திலைக்கு சுண்ணம்பு தடவி கூடப் போட்டு குறுணி தண்ணீர் வார்த்து நாழியாக காய்ச்சி மூன்று நாள் குடிக்க கிறுனி கழிச்சல் போகும்.

<u>பஞ்ச மூல கசாயம்</u>:-

சித்தாமுட்டி வேர், பேறுமுட்டி வேர், மை பாலை வேர், சீந்திலா கொடி முள்ளி வேர், விசரி வேர், பயிறகாலி வேர், ஆடாதோடை ஊசி தகரை கடம்பல கோரை கிழங்கு வெள்ளருகுவில்வ பத்திரி வேர், நிலவேம்பு கரிசிலாங் கண்ணி உத்தாமணி வெள்ளை சாறணை குப்பை மேனி காஞ்சொறி செலை முரிஞ்சான் கரு நொச்சில் சுனக்கன் வேர், சிறு குறுஞ்சான் கன்னி காவாளை சவை காவாளை முசுகறணை முக்காவளை மூன்று சுண்டை கடை கட்டி வேர் சிவனார் வேம்பு கஞ்சாங் கோரை நாய் விலா முசு முசுக்கை குமிழம் வேர், சாட்டறணை வேர், வட்ட திருப்பி வட்டக் கிறு கிறுப்பை, வெள்ளை வேல், பேய்புடல் கீழா நெல்லி, நீலி வேர், முருநெல்லி வேர், வச்சிற நீலி பற்படாகம் விஷ்ணுகாந்தி, அம்மா பச்சரிசி நிலாவரை முக்கதாரி நரிப் பயத்தன் நெல்லி முள்ளி தும்பை பன்னை எலுமிச்சம் வேர், புன் முருங்கை காய் பத்திரி, குமட்டி முக்குறட்டை துத்தி சிறக்கீரை இந்த அருபத்துநாலு வகையும் வேரும் கூட்டி கத்தரிச்சு ஒரு பானையில் போட்டு ஆறு வெல்லம் தண்ணீர் விட்டு படியாக காய்ச்சி இறக்கக் கொண்டு கடை சரக்கு பறங்கிப் பட்டை பிறப்பன் கிழங்கு, சாதிக்காய், சாபத்திரி, ஏலம், லவங்கம், லவங்கப் பத்திரி, தாளிச பத்திரி, மோடி சுக்கு, திப்பிலி தும்பருஷ்டகம், கொத்தமல்லி, வாய் விளங்கம் கோரோசினை பெருங்காயம் கொண்டு பறங்கி மிளகு, சீரகம், ஓமம், கருஞ்சீரகம், அக்கலகாரம், கோஷ்டம் இந்த அறுபத்திநாலு வகையும் சூரணம் பண்ணி சாப்பிடவும். இல்லா விட்டால் லேகம் பண்ணி சாப்பிடவும். இதற்கு தீரும் வியாதி அறுபத்து நாலு வகை வியாதி யும், முப்பத்திரெண்டு வகை கிரணியும், குஷ்டம் பதினெட்டு வகை பிறமியம் இருபத்தொரு வகை மேகம் எட்டு வகை குன்மமும் ஐந்து வாகை சூலையும் தீரும்.

<u>மிக பத்சவி குளிகை</u>:-

ரசம் விராகனிடை.க, வெங்காரம் விராகனிடை.க, நேர்வாளம் விரா க, சுக்கு விராகனிடை.க, மிளகு விரா்கனிடை.ங, புளியம் பட்டையில் சங்கு பற்பம் ...ம் விராகனிடை. இது வெல்லாம் கூட்டி மீன் பிச்சிலரைத்து குன்றி மணி

மாதிரி குளிகை பண்ணி இஞ்சி சாத்திலாவது மூலைப் பாலிலாவது இட சுரம் தீரும். பத்தியம் கடுசா யிருக்கவும்.

கால், கை எரிச்சலுக்கு எலும்புருக்கிக்கு:-

வெள்ளை பாஷாணம், வசம்பு, புது கரப்பான் பட்டை உள்ளி நல்லெண்ணை இருநாழி, இது இடித்து குரவை என்னையில் போட்டு பொன்னிறமாக காய்ச்சி வடித்து காலமே முகம் கழுவி எண்ணை சாப்பிடவும். காலெரிவு வாங்கும்.

எலும்புருக்கிக்கு மருந்து:-

திப்பிலி பலம்.க, இஞ்சி ஒட்டெகட ஐந்து நாள் சாப்பிடவும். எலும்புருக்கி தீரும்.

சர்வாங்க குளிகை:-

கடுக்காய் விராகனிடை.க, சித்திர மூலம் விராகனிடை.ச, சுக்கு விராகனிடை.ச திப்பிலி மூலம் விராகனிடை.ச, கோரைக் கிழங்கு விராகனிடை.ச, ஏலம் விராகனிடை.உ, செவியம் விராகனிடை.உ, சிறுநாகப்பூ, விராகனிடை.உ, ஓமத்தம் விரை விராகனிடை.உ, இது வெல்லாம் கூட்டி இஞ்சி சாறு விட்டு அரைத்து சிறு பயறு பிரமாணம் குளிகை பண்ணி இஞ்சி சாத்திலாவது சுக்கு கசாயத்திலாவது கொடுக்க வியாதி தீரும். மத்த வியாதிகளுக்கு அதுக்கேற்ற கசாயத்தில் கொடுக்கவும். பத்தியம் கடுசா இருக்கவும்.

சூத்திரி குமார மாத்திரை:-

ரசம் விராகனிடை.க, நாபி விராகனிடை.க, கெந்தகம் விராகனிடை.க, வெங்காரம் விராகனிடை.க, இது கூட்டி எருக்கம் பால் விட்டு அரைத்து குளிகை பண்ணி புத்து மண் கொணி பட்டு உமிக் காந்தல் இது மூன்றும் அரைத்து குளிகை பண்ணிக் காய வைத்து அதில் இந்தக் குளிகை வைத்து சீலை மண் செய்து ஒரு சட்டியில் மணல் போட்டு அதின் நடுவே வைத்து சட்டியிட்டு மூடி மண் கட்டி அடுப்பு மேல் வைத்து முப்பது நாழிகை எரியிட்டு அதின் பிறகு எடுத்து பரணியில் வைத்துக் கொண்டு சன்ன வாத ரோகங்களுக்கு எந்த வகை கசாயத்திலும் இடலாம். பத்தியம் கடுசா இருக்கவும்.

ஐக்கியக் சன்னி வாத வயிரவி:-

ரசம் விராகனிடை.க, நாபி விராகனிடை.க, கெந்தகம் விராகனிடை.க, அரிதாரம் விராகனிடை.க, மனோசிலை விராகனிடை.க, வெங்காரம் விராகனிடை.க, சாதிலிங்கம் விராகனிடை.க, இது வெல்லாம் சுத்தி பண்ணி சித்திர மூல கசாயத்தில் ஒரு நாளரைத்து எலுமிச்சம் புளியிலரைத்து இஞ்சி சாற்றில் ஒரு நாளரைத்து உளுந்து பிரமாணம் குளிகை பண்ணி வந்த கசாயத்திலும் கொடுக்கலாம். சன்னி வாத சுரம் தீரும். இதுக்கு பத்தியம் அவரை முருங்கைக்காய், மிளகு நீர் உப்பில்லாமல் கூட்டவும்.

வாத ராட்சதன் குளிகை:-

ரசம் விராகனிடை.க, நாபி விராகனிடை.க, கெந்தகம் விராகனிடை.க, குருசாணி ஓமம், கடுக்காய் தானிக்காய் நெல்லிமுள்ளி சந்தி பாஷாணம் நவச்சாரம் சித்திரமூலம் இந்துப்பு சீரகம் காய் விளங்கம் வெங்காரம், சுக்கு, மிளகு, திப்பிலி எட்டிக் கொட்டை இது வகைக்கு விராகனிடை.க இது வெல்லாம் கூட்டி எலுமிச்சம் புளியிலரைத்து உளுந்து பிரமாணம் குளிகை பண்ணி எந்த கசாயத்திலும் கொடுக்கலாம். இதுக்கு உப்பு, புளி விடவும்.

ரசம் நாபி, கெந்தகம், லோக பற்பம் இது வகைக்கு விராகனிடை.க, அத்திப் பட்டை விராகனிடை.ச இது வெல்லாம் கூட்டி செருப்படை சாத்திலரைத்து மூன்று நாளரைத்து உளுந்து பிரமாணம் குளிகை பண்ணி மூசை பண்ணி அதிலிட்டு சீலை மண் செய்து பானையில் போட்டு வைத்துக் கொண்டு இஞ்சி சாத்திலிட சகல சுரம் தோஷங்களும். இதுக்கு உப்பு, புளி விடவும்.

பசுவின் பால்.உ, உள்ளி ஒரு சேர் பச்சரிசி நொய் ஒரு சிறங்கை இவைத பாகமாக காய்ச்சி மூன்று வேளை சாப்பிடவும் சன்னி தீரும்.

சன்னி பிற இழுப்புக்கு:-    20.2.63.

நொச்சிலை இலையும் பட்டையும் ஒரு வீசை நறுக்கி பானையில் போட்டு பதக்கு தண்ணீர் விட்டு நாழியாகக் காய்ச்சி இந்த சாறிலாங் கன்னி ரசம் நாழி விட்டு நல்லெண்ணை நாழி விட்டு பதமாக காய்ச்சி வடித்து மேலுக்கு தடவி பிடிக்க சன்னி வாதம் பிற இழுப்பு நிற்கும். இதுக்கு பத்தியம் சுக்கு, மிளகு, திப்பிலி வறுத்துப் பொடி பண்ணி சோத்தில் தூவி நெய் கூட்டிக் கொள்ளவும். உப்பு, புளி விடவும்.

சன்னிக்கு கலிக்கம்:-

சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், தான்றிக்காய், பெருங்காயம், நேர்வாளம் இவ் வகைக்கு விராகனிடை.க இது வெல்லாம் கூட்டி எலுமிச்சம் புளியில் விட்டு அரைத்து வெப்பங் கொட்டை மாதிரி குளிகை பண்ணி வெந்நீரிலரைத்து கலிக்க மிடவும். சகல சன்னியுந் தீரும்.

சன்னிக்கு முலைப்பால் தயிலம்:-

சிறுதேரை பொன்னாங்கண்ணி, முக்காவளை, குடப்பம், வேர், விஷ்ணு காந்தி, அவரிவேர், வட்டத் திருப்பி வேர், ஆடாதோடை இலை, ஆதண்டன் இலை இது வெல்லாம் சமனாக கூட்டி பதக்கு நீர் விட்டு படியாக காய்ச்சி வடித்துக் கொண்டு, ஏலம் லவங்கம் அதிமதுரம், சென்கலி கோஷ்டம், சன்டு பறங்கி மோடி, சாதிக்காய், திப்பிலி, திப்பிலி மூலம், சிறு தேக்கு, சீரகம், கருஞ்சீரகம், சதாகுப்பி, சாஸ்திர வேதி இது வகைக்கு விராகனிடை.க, மூன்னி வேர் இலையும் இது வெல்லாம் கூட்டி விளக்கெண்ணை ஒரு படி முலைப்பால் படி. இது வெல்லாம் முன் தயிலத்தில் விட்டுக் கொதிக்க விட்டு மற்ற நாள் வடித்து திப்பிலி மேல் பொடி தூவி வைத்துக் கொண்டு குழந்தைகளுக்கும் பிள்ளையுண்டான பெருக்கும் நாள் சென்ற ஒட்டுக் காய்ச்சல் விடாத சுரத்துக்கு அஸ்தகத்தில் பத்தின சுரத்துக்கு விட்டு விட்டுக் காயிற சுரத்துக்கும் உள்ளுக்கு கொண்டு மேலுக்கு பூசவும். தீராத சுரமெல்லாம் தீரும். இந்ததயிலத்தோடே செங்கழு நீர்க் கிழங்கு, குடப்பம் வேர், கோரோசனையும் கூட்டி பொடி பண்ணி கலந்து வைத்துக் கொண்டு கொடுக்கவும். இது நல்ல பிரயோக தயிலம்.

நிலாவாரை நிலவேம்பு முடு திர்கு பாலை, வெள்ளருக்கு சமூலமும் கொடிவேலி வேர் பட்டை, சிறு தினாக்காய் வேர் பட்டை விளா வேர் பட்டை மிளகரணை வேர்ப் பட்டை, முக்கதாரி வேர் பட்டை, நாவலை வேர் பட்டை, குட்டிப் பலா வேர்ப் பட்டை, குருஞ்சான் வேர் பட்டை, சங்கம் வேர்ப் பட்டை மருதுமத்தம் வேர் பட்டை இது வெல்லாம் கூட்டி உலர்த்தி பொடி செய்து வஸ்திர காயம் பண்ணி வெந்நீரில் கொடுக்க சன்னி வகையெல்லாம் தீரும். இதுக்கு இச்சா பத்தியம் பண்ணவும்.

பாலர்ந்த சன்னிக்கு மருந்து:-

உள்ளி சேர்.உ, திப்பிலி பலம்.க, மோடி பலம்.க, மிளகு பலம். சீரகம் பலம்.உ தம்பருஷ்டகம் பலம். , நாகேசுரம் பலம்.க, தாளிச பத்திரி பலம்.வ, ஓமம் பலம். கடுக்காய், பலம். , திப்பிலி மூலம் பலம். பெருங்காயம் பலம்.வ, வாய் விளங்கம் பலம். மஞ்சுரம் பலம்.வ, தேன் சேர்.க, சர்க்கரை சேர்.உ, தேன் சர்க்கரை போட்டு அதி ரச பதமானவுடனே மற்ற சூரணம் போட்டு மூடி ஒரு ஆவி வந்த பிறகு களி போல் கிண்டி லேக பதமாய் எடுத்து தினம் களிப்பாக்கு மாதிரி கொள்ளவும். இதுக்கு தீரும் வியாதி ருசுக சன்னி, இது வெல்லாம் தீரும். கெற்ப சன்னி அதிக சன்னி அறை சன்னி அதிர சன்னி இது வெல்லாம் தீரும். இதுக்கு பத்தியம் உப்பு, புளி விடவும்.

சுக சன்னிக்கு:- சாதிக்காய் விராகனிடை.க, லவங்கம் பலம்.வ, சித்திர மூலம் பலம்.

மாவிலிங்கப் பட்டை, சிறுகாஞ்சொறி, பேய்ப்புடல், சுக்கு இவை கஷாயம் வைத்து கொடுக்க சுக சன்னி தீரும். இதுவும் உள்ளம் மாவும் உரல் வெண்ணெயில் வேக வைத்து இறக்கி பனியில் வைத்து காலமே சாப்பிட சுக சன்னி தீரும்.

மச்ச செந்தி வாய்வுக்கு:-

தழுதாழை முலை, பெருகுருஞ்சான் இலை 'கரு நொச்சி இலை, ஊமத்தையிலை கரியமுத்தின் இலை, கரிசிலாங் கண்ணி இலை, சாம்பிராணி இலை, உத்தாமணி இலை, குப்பமேனி இலை, வெள்ளை இலை வெள்ளை சாட்டறணை இலை, வாத நாராயண இலை ஆக வகை. சரியாய் பசரு வகை வாங்கி அதில் கடை செலவு மிளகு பலம். திப்பிலி பலம். மோடி பலம். மட்டி மொக்கு பலம். லவங்கம் விராகனிடை.ஐ, சாதிக்காய் விராகனிடை.ஐ, பெருங்காயம் விராகனிடை.ஐ, வெள்ளை பூண்டு பலம்.உ, வாய் விளங்கம் பலம். பறங்கி பட்டை சேர்.க, இது வெல்லா மரைத்து பசருலே கலந்து பழைய கேவுரு மாஷி கட்டி கனி கீறி சூரிய புடத்தில் வைத்து உடம்புக்கு கடவி ஸல் எல்லா நோவும் தீரும். இப்படி எட்டு நாளைக்கு ஒரு தரம் இந்தப்படி செய்யவும். உள்ளுக்குக் கொள்ளவும்.

சகல வாய்வுக்கு தயிலம்:-

சித்தா முட்டி வேர், பேரு முட்டி வேர், வருகலை வேர், கண்டங் கத்திரி வேர், நெருஞ்சி வேர், வில்வ பத்திரி வேர்ப் பட்டை நொச்சி வேர், அமுக்கிரான் கிழங்கு, சித்திர மூலம், சாறணை வேர், தேவதாரி வேர், நன்னாரி வேர், கரு விழ பட்டை அயில் பட்டை முக்கதாரி பட்டை, தழுதாழை வேர், தாமரை முளை முக்கா வாளை உழுந்து நாழுரி இழ கசாயம் வைத்து இரண்டு வள்ளம் தண்ணீர் விட்டு எட்டிலொன்றாய் காய்ச்சி இறுத்துக் கொண்டு பசுவின் பால் நாழுரி விட்டு தயிலம் போல் காய்ச்சி இதில் சுக்கு, திப்பிலி, மிளகு, கோஷ்டம், அதிமதுரம், சடாமாஞ்சில், கஸ்தூரி மஞ்சள், சயிந்த லவணம், சன்ன குறம், சந்தன கட்டை, வசம்பு, சதாகுப்பி வெட்டி வேர், லவங்கப் பட்டை, லவங்கப் பத்திரி, சிறு நாகப்பூ, கஸ்தூரி, குங்குமப் பூ கோரோசினம் இது வகைக்கு விராகனிடை. இது மூன்று திரிகம் நிறுத்தி குறையாமலும் இடித்து வஸ்திர காயம் பண்ணி முன் தயிலம் போட்டு எண்ணெ படி விட்டு காய்ச்சி அதின் பிறகு சூரணம் போட்டு எண்ணெ படி விட்டு பக்குவமாய் காய்ச்சி வடித்துக் கொண்டு மத்த நாள் ஒரு கரண்டி உள்ளுக்கு கொள்ளவும். எந்த வாய்வும் தீரும். பத்தியம் கடுசா இருக்கவும்.

கால் கை பிடிப்புக்கு:-

கழற விரா ஆவது வசி தொட்டலாதுவுது அதின் வேர்ப் பட்டை கொண்டு வந்து நறுக்கி ஒரு பானையில் போட்டு குழுனி தண்ணீர் விட்டு படியாக காய்ச்சி மூன்று நாள் கொடுக்கவும் பத்தியம் உப்பு புளி விடவும். பத்தியம் மூன்று நாள் இருக்கவும்.

வாய்வுக்கு லேகியம்:-

நொச்சி வேர் பலம்.ருய, வாத நாராயணன் பட்டை பலம்.ருய, விழுதி வேர் பட்டை பலம்.எய, காவாளை வேர் பட்டை பலம்.யஉ, முரு நெல்லி வேர் பலம்.உரு சிற்காந்தி பட்டை பலம்.ய, சாட்டறணை வேர் பலம்.யரு குப்ப மேனி பலம்.ரு ஆதண்டை வேர்ப் பட்டை பலம்.உய ஆக வகை ஒன்பதுக்கு பலம்.உஎ கூட்டி ஒரு மொடாவில் போட்டு எட்டு மரக்கால் நீர் விட்டு ஏழரை சாமம் எரிவிட்டு குறுணியாக காய்ச்சி இறுத்துக் கொண்டு கடை திருகு திப்பிலி பலம்.க, கிராம்பு பலம். அசமதாகம் பலம்.க, வாலுளுவை அரிசி பலம்.க, சுக்கு பலம்.க, வாய் விளங்கம் பலம்.எா செவியம் பலம்.க, மிளகு பலம்.க, சீரகம் பலம்.க, அதிமதுரம் பலம்.க, கடுக்காய் பலம்.க, தானிக்காய் பலம் கொண்டு பறங்கி பலம். , ஏலம் பலம்.வ, லவங்கப் பட்டை பலம்.வ, லவங்கப் பத்திரி பலம். திப்பிலி மூலம் பலம். அக்கலகாரம் பலம்.

ங்கல் கோஷ்டம் பலம். , கருஞ்சீரகம் பலம்.க, இலை கடுக்காய் பலம் ஒன்றுக்கு
சாளி ஏலம் பலம். கோரோசினம் பலம்.உ, சடாமாஞ்சிஷம் பலம்.க, பறங்கிப் பட்டை
ம்.ய இது எல்லாம் இடித்து சூரணம் பண்ணி முதல் தயிலத்தில் போட்டு தேன்
சேர்.ஙு, சர்க்கரை சேர்.ஙு, பசுவின் நெய் சேர்.ஙு இது கூட்டி லேகியம் பண்ணி சாப்பிடவும்.
இதில் தீரும் வியாதி வாய்வும் போகும். பாக்கு பிரமாணம் சுக் சாப்பிடவும். இச்சா
பத்தியம்.

<u>வாத முதலானது:-</u>

நொச்சி வேர் கொண்டு வந்து பானையில் போட்டு தயிலம் வாங்கி இதில் திப்பிலி
திரும்பு, அசமதாகம் வாலுளுவை அரிசி உள்ளி இவை ஒன்றுக்குபலம்.ஙு இது வெல்லாம் இடித்து
சோதிச்சு முன் தயிலத்தில் போட்டு லேகியம் செய்து புளியங் கொட்டை பிரமாணம் கொள
ளவும். வியாதி தீரும். வாத குன்மம், பித்த காமாலை, குளிர், வெளுப்பு, பார்வை,
வயத்து வீக்கம் சந்து வாதம் இது லெல்லாம் தீரும்.

<u>கை கால் முடக்கிறதுக்கு:-</u>

பீசல் கொட்கட இலையும் கருப்பு சாகத்தை மாவிடித்து பிட்டு சுட்டு நல்லெண்ணை
வார்த்து தின்னவும். பீசம் வேர் கொண்டு வந்து இலுமிச்சு இரண்டு பலம் கூட்டி நல்லெண்ணை
ஒரு பலங் கூட்டி பிசைந்து சூரிய புடமிட்டு சருவாங்கமும் பிடிக்க முடங்கின வாதம் நிற்கும்.

<u>கிறந்தி புண்ணுக்கு குலைக்கு:-</u>

குலையானால் விளக்கெண்ணை நாழியில் அந்த பிரகாரம் பண்ணி உள்ளுக்கு கொடுக்க
வும். மேலுக்கு பிடிக்கலாம். பத்தியம் கடுசாயிருக்கவும். மாவிளங்கன் இலை அரைத்து
கெச்சக்காய் பிரமாணம் வெந்நீரில் குழப்பி உள்ளுக்கு கொடுக்கவும். இந்தபடி மூன்று நாள்
ஆறு பொழுது இரண்டு வேளையும் கொடுக்கவும். பசுவின் பால் சேர் கூட்டிக் கொள்ளவும்.
கிறந்தி தீரும்.

<u>குலைக் கட்டுக்கு:-</u>

சீதா செங்களனி நீர் அரைத்து பாக்கு பிரமாணம் இதில் இத்துடன் கூட ஆறு
பணவிடை ரசம் விட்டு அரைத்து பன்னிரண்டு குளிகை செய்து ஆறு நாள் சாப்பிடவும். மருந்து
சாப்பிட்டவுடனே புகை பிடிக்கவும். பத்தியமில்லை பழையது சாப்பிடலாம். குளிர்ந்த
தண்ணீர் ஆகும். சீலை பட்டமாகும். ஒன்பது நாள் நல்லெண்ணை தேய்ச்சு முழுகவும்.
காங்கையானால் பசுவின் நெய் கூட்டவும். மருந்து சாப்பிடுகிற போது பால், மோர் தள்ளவும்.
குலைக் கட்டு தீரும். நல பிறுத்த பிள்ளைகளுக்கு முக்கால் பணவிடை அதிகம் சிறு பிள்ளை
களுக்கு அரை பணவிடை கொடுக்கவும்.

மிளகு ஒரு பிடி, வெள்ளை வெங்காயம் ஒரு பிடி, கோழி முட்டை இரண்டு
அதில் வெள்ளை கருவெடுத்துக் கொண்டு நல்லெண்ணை படி.க இது அரைத்து எண்ணையில்
கலந்து சாப்பிடவும். உப்பு, புளி விடவும்.

<u>குலை வாய்வுக்கு எண்ணெய்:-</u>

விளக்கெண்ணை படி. வெங்காயம் படி. இதை ஐந்து எண்ணையில் போட்டு
அதில் பிறகு வெள்ளரி விரை அரைத்த சாந்து மாதிரி பூருகம் விளாங்காய் மாதிரி இது
வெல்லாம் எண்ணையில் போட்டு பதத்தில் எரித்து பதம் வருகிறதற்கு முன்னே வெங்காரம்
பொரித்துப் போட்டு பதம் பார்த்து எண்ணை இறக்கி- அடித்துக் கொண்டு முதல் நாள்
விளக்கெண்ணை தேய்ச்சு முழுகவும். மறுநாள் எண்ணை குடிக்கவும். பத்தியம் உப்பு, புளி,
விடவும். புகையாகாது. இந்தப்படி பத்து நாளைக்கு ஒருக் கால் மூன்று முறை கொடுக்கவும்.
பத்தியம் உப்பு, புளி விடவும். புகையாகாது. இந்தப்படி பத்து நாளைக்கு ஒருக்கால்
மூன்று முறை கொடுக்கவும். இதில் தீரும் வியாதி வெள்ளை நீர்க் கட்டு அடைப்பு குலை
வாய்வு தீரும்.

நீர் கடுத்து விழ சுரத்து நீரடைப்புக்கு:-

மிளகு பலம். , சர்க்கரை பலம். அரைக்கால் படி நல்லெண்ணெ காலபடி இரு பொடி பண்ணிப் போட்டு சர்க்கரை கூடப் போட்டு ஏகமாய் கலந்து கொடுக்கவும். எரிவு கண்டால் முருங்கையிலை வேக வைத்து அரைப்படி தண்ணீர் குடிக்கவும் தீரு பேயன் வாழைப் பூ ஆலவும் ரஸ்தாளிப் பழ வாழைப் பூவாலும் இடித்துச் சாறு பிழிந்து திப்பிலியும் கூட அரைத்து பசும் பாலில் அரைத்து வெண்ணெயிலாவது குழப்பி கொடுக்கவும். நீர்க் கட்டு விடும். உப்பு, புளி விடவும்.

சுரம் தலைவலிக்கு மருந்து:-

கலிக்கம், நாபி, ரசம், செந்தூரம், லவங்கம், சாதிக்காய் இது வகைக்கு விராகனிடை.2, மிளகு விராகனிடை.8 இது இரண்டு*வெல்லாம் சுத்தி பண்ணி சீப்பப் மேனிச் சாற்றில் இரண்டு சாமம் அரைத்து குளிகை பண்ணி நிழலிலுலர்த்தி வைத்துக் கொண்டு காடி பாலிலரைத்து கலிக்கமிடவும். கண் வீக்கமல் கத்தாழை சோற் கழுவி கட்டவும். நசியம்: எருக்கம் வேர் காடி வார்த்தரைத்து நெய்யில் கலந்து நசியமிட தலைவலி நிற்கும். இதக்கு மாத்து குளிர்ந்த தண்ணீரில் கழுவ நிற்கும்.

சுரத்துக்கு அரையாப்புக்கு என்னை:-

வெள்ளை பாஷாணத்தை பாகல் சாற்றில் சுத்தி பண்ணி சாதிலிங்கம் சுத்தி பண்ணி சமானமாக கட்டி பாகல் சாற்றிலரைத்து சிறு பயறு பிரமாணம் குளிகை பண்ணி நவ சுரத்துக்கு இஞ்சி சாற்றில் கொடுக்கவும். ஒரு உருண்டை கொடுக்க சுரம் நிற்கும். பத்தியம் கருசா யிருக்கவும்.

அரையாப்புக்கு என்னை:-

கொடிவேலி வேர் பட்டை ஒரு பிடி, பெரு மரத்து வேர்ப் பட்டை ஒரு பிடி, வேளை வேர் ஒரு பிடி, சிறுதுரை வேர் ஒரு பிடி, நேர்வாளம் பருப்பு பத்து ஈர வெங்காயம் பலம்.2 இது வெல்லாம் கட்டி நறுக்கி என்னை காய வைத்துக் கொதிக்கிற போது மருந்தைப் போட்டு பொங்காமல் சிவக்கக் காய்ச்சி இறக்கி அதில் பனவிடைரசம், மணத்தக்காளி சாற்றிற் முறித்து என்னையில் கலந்து தட்டத் தினி என்னை அந்தி சந்தி கொள்ளவும். பத்தியம் கருசாயிருக்கவும்.

நீர்க் கட்டுக்கு, மூலைக் குத்து நோவுக்கு:-

மணலியை நறுக்கி படி நீர் விட்டு அரைப் படியாக காய்ச்சி வெங்காரம் விராகனிடை.2, நெருமை சாணியில் சுத்தி பண்ணி பொரிச்சு கூட்டிக் கொடுக்க நிற்கும்.

குரிலை வாரை வேரும் அரசம் பிசினும் அரைத்து பசும் பாலில் குடிக்க கல்லு நெரிச்சு விழும்.

நாயுருவி வேர், சொப்பு நெருஞ்சில் வேர் இது இரண்டும் தேன் விட்ட ரைத்து முலை மேல் பூசவும் முலைப் புண் ஆறிப் போகும்.

மருக்காள பட்டை அரைத்து சீலையில் தடவி புண்ணு மேல் பூசவும் ஆறிப் போகும்.

சன்னி கசாயம்:-

நன்னை வேர், காட்டு வாழை வேர், வில்வப் பத்திரி வேர், நெருஞ்சில் வேர், பாப்பார புள்ளி வேர் சித்தமல்லி வேர், பெரிய மல்லி வேர், சுக்கு இது கசாயமிட்டு கொடுக்க சுரம் பதினெட்டும் தீரும்.

மூக்கில் வாயில் ரத்தம் கண்டால்:-

கத்தாழை சோற் முட்ட சாம்பலும் பிசைந்து தலையின் மேல் அப்பி சித்தாமணக்கு இலை போட்டுக் கட்டத் தீரும்.

தலை நோவுக்கு:- சீந்தி இலை, நீர் முள்ளி இலை சுக்கு இது மூன்றும் கூட்டி நறுக்கி சாறு பிசைந்து நசியமிடவும் தலையில் கட்டவும். பின்னையுண்டாக அமுக்கிறு

__ளை_யுண்டாக_அழுக்கிறு_ரணம்:-__

பூசத்தீ நாள் பூவரசு மேல் புல்லுருவியும் புங்கு மேல் புல்லுருவியும் பசுவின் விலரைத்து விலக்கமான நாளில் மூன்று நாள் குடிக்க பிள்ளையுண்டாம்.

அமுக்கிறா கிழங்கு உலர்த்தி இடித்த வஸ்திர காயம் பண்ணி வெருகடி பிரமாணம் பசுவின் நெய்யில் கொள்ளவும் உடம்பு பருக்கும். நெய்யும் தேனும் கூட்டிக் கொள்ளவும்.

__இருமலுக்கு_எலி_கடிக்கு:-__

கடுக்காய், தானிக்காய், நெல்லிப் பருப்பு மோடி இலை பொடி பண்ணி சீலையில் பரப்பி திரி சுத்தி விளக்கில் கொளுத்தி திரி புகை பிடிக்க இருமல் தீரும். விலக்கிக்கன்றே நாழி, சித்தாமுட்டி வேர், பெருமுட்டி வேர், கண்டங் கத்திரி வேர் ஆடாதொடை வேர், செப்பு நெருஞ்சி வேர், சுகரை வேர், சிவனார் வேம்பு, சங்கம் வேர், பாவி மரத்து வேர், வேலிப் பருத்தி வேர், வெள்ளறுகு மூடக் கொத்தான் அனிஞ்சில் குட்டிப் பிலா சிறு கீரை பொன்னாங்கண்ணி நிலாவாரை நீர் முள்ளி நொச்சில் தருகாழை சங்கங் குப்பி கோரைக் கிழங்கு, கற்றாழை செருப்படை இந்த வகைக்கு பலம். சமூலக கொண்டு பெய்புடல் பர்ப்படாகம் கடுக்காய், கருஞ்சீரகம், செஞ்சந்தனம், திப்பிலி மூலம் அதிமதுரம், அரத்தை சாதிக்காய், சாபத்திரி தானிக்காய் லவங்கப் பட்டை கருஞ்சீரகம் கிராம்பு இத வகைக்கு விராகனிடை.கவ வசம்பு விராகனிடை. வெங்காயம் விராகனிடை.ரு ஆடாதொடை பழம் விராகனிடை.ரு, கண்டங் கத்திரி பழம் விராகனிடை.ரு முன்னே காட்டு வகை மருந்த வகைக்கு விராகனிடை.உ எல்லாம் கூட்டி இடித்து பொடி பண்ணி என்னையில் போட்டு எட்டு நாள் சூரிய புடம் வைத்த தட்டு எடை என்னை கொடுக்கவும். இதக்குப் போகும் வியாதி சுரம், சுவாச காசம் சயமாலை கரப்பான் எலிகடி இரைப்பு இது வெல்லாம் தீரும். இது கை கண்டது.

__வெள்ளை_ஒக்காளத்துக்கு_மருந்து:-__

மொளிகி, சீரகம், சாலிச பத்திரி, திப்பிலி, அதிமதுரம், வெங்காரம் தேக்கால் கொட்டை நெல்லுப் பொரி, மயிலிறகு கருக்கு அட்டம், புதலை கருக்கு ஆமையோடு கருக்கு கடை மருந்த எட்டு வகையும் பதத்தில் வருத்துப் பொடி பண்ணி முன் கருக்கு கூடக் கலந்து எலுமிச்சம் புளியில் மூன்று நாள் கொடுக்க வெள்ளை ஒக்காளம் நிற்கும். இது கை கண்டது.

* முதல் முடிய பக்க எடுகள் மரண கெண்டி சாஸ்திரம். பிரதி செய்யாமல் விடப்பட்டன. *

****

__சூரிய_வெண்பா:-__

1. சூரியமாம் வாகடக்கிரூட் பொருளை ஆராய்ந்து
சரியதாம் செந்தமிழை செப்புகிறேன்
வுள்ள நிதானம் மத்திலஞ்சி மலிருபகளே வள்ளலே என் மீதில் வா.

2. கட்டலா வெல்லுவதில் சேத்துமத்தில் வந்தகொரு
பொட்டு கிறந்திகளும் போம் விடுமே
பாலையாய் வாகான பிசிரமும் பத்தும் சனி தீர
துக்கிருளம் பஞ்சு மரத்தை.

3. அரத்தை சதகுப்பி சுக்கு ஆனை நொச்சிலைச் சாத்தில்
உரைத்தழக்காய் காச்சிய பின்றன்ன வருக்க மதன் கலை வலியம நிரெத்தம் தன்னுடனே
பிசிரமும் குலை குலைந்து போகுமே என்று கூறு.

4. கூற மென்ற டவட்டை கொக்கை சித்தாமுட்டி வேர்
விரேசனமும் வேலிப் பருத்தியுடன்
கூறுகின்ற நல் மிளகும் கூட்டி நயமாக கசாயமிட்டு சன்னி மில்ல வாத சுரம்
செப்பு.

21.2.63.



செப்பு மெனும் பேரிலந்தை சேரு மலை யருத்த வுப்புடனும் மேகாடியுடனரைத்த மெய்ப்பாக மத்திட்டு தான் கலைத்த வந்தலரை புசி விக்க சுத்து மெரிவாத மில்லை தான்.

6. தாகவென்றும் வெள்ளுள்ளி தப்பாமலுப்பு மேந்தி
வேனென்றும் அக்கினியில் வேக வைத்து
மானென்றும் பிங்குவ்வுடனே யரைத்து யிருந்த
நிரை குடிக்கில் மங்கு குலை வாய்வு மில்லை மான்.

7. மானே கேள் நீரடைக்கில் வழும் பசரியுடன் தானே நிலகத்திரி இலையும் பானையில் போட்டு கசாயமிட்டு வெங்காரமிட்டு நத்தில் கல்லடைப்பு தீருமெனக் கான்.

8. கானும் புறா. நவமும் காயன் கழல் பருப்பும் பூபன் வசம்புடனே் பொரந்த சுக்கும் வேனுமென பன்னீர் கசாயம் பருகி பருகிய பின் விஞ்சின் வாதம் போம் விடு.

9. விட்டதொரு வேப்பிற்கும் மேவு கருவேப்பிற்கும் முட்டு சுக்கு சிரகமும் மோகமும் தட்டியிட்டு காய்ந்த கசாயம் கொள்ள காணு மச்ரனமும் பாய்ந்த கிரனிகள் போம் பார்.

10. பாரிசைந்த நெல்லி முள்ளி பாரியதோர் கலிக வேர் சீரிசைந்த சீரகமும் சேர்ந்த சுக்கும் வேரிசைந்த சித்தாமுட்டி நெல் பொரியும் சேர்ந்த கசாயம் கொள்ளில் பித்தம் விட்டோடு மெனப் பேசு.

11. பேசும் பிரண்டையுடன் பேரிசைந்தவேப்பிற்கும்
மூசும் புரிசமும் வித்து மோதகமும்
வாசி பண்ணி கொள்ளிற் கசாயமதில் குன்மம்
விருசிருமா விள்ளிற் விழத் தேக்கு மிது மெய்.

12. மீத வெனும் கள்ளியுடன் வேத்தலிற் சுன்னாம்பு மெந்தி
போதமுடன் திற்புடமிட்டு பாதியுடன் வீக்கம் பிளவையுடன்
வீரிய தொறங்குமந்த பாருக்குள் பறந்தோடும் பண்வு.

13. பண்ணும் பருத்தி வேரை பாருள்ள நெற்பொரி யும் எண்ணுன விக்கல் அசந்த போ போமே விரைந்து.

14. விரும்புகின்ற சீரகமுத் மேன்மையுடன் நெல்லி முள்ளி
பொரும்பு சுக்கேலமுடன் பொடிசையாய்
நிறம்பிடவே சர்க்கரையும் தேனும் களற் குத்தன்ன
சொக்கற் றிடுவா ளையே பித்தம் செப்பு.

15. செப்பு சிற மன்றறம் சுத்தி பொடியுருவி சாம்பல் மிகு பொடி நற் சரியாய் தெம்பிடவே எட்டிலொன்றுய் கசாயமிட்டு இறக்கி கசாயம் கொள்ளில் அஷ்ட குன்மமும் போகுமே அலைந்து.

16. அலைந்து குவளையோ காந்தம் பொடி செய்து தலையின மிகு பொடி நற் சரி யாய் மலையிற் பெருங்காயந்தான் கூட்டி பேருலகிலண்ட வாதம் வருங்காயம் போல் வீங்கினது வாடும்.

17. வாடுகின்ற விந்ரவிக்கு பதலஉந சாந்தொடுந்
தேடுகின்ற காயமதிற் சேற்பதி ஒடுகின்ற செம்பு ரசம், சாத்தில் செலத்தும் செலுத்திய பின் வெம்பு மெரி குன்மம் வெரிந்த.

18. வௌந்தமிளகரைத்து வெண்நீருடன் கலந்து பொருத்தப் புவியிலனங்கை பொற்றகின்ற குலை நடற்சிருமி சிதஞ்சி தறணமும் பலி குடி போகுமே பெரு.

19. பெரும் பேய் சுரை இலையும் பேர்ச்சம் கூட்டி மிருகின்ற பிட்டாக்கினத்தை வாங் கியே கரு நீ கேள் திப்பிலியும் வெங்காரம் குரனமும் தேனுமிட உப்புடனே காய மெல்லாம் ஒடும்.

20. பாரிரோ நீர் பிணிகள் பேயன் பழத்துடனே சேரிரே சர்க்கரையும் சீரகமும்
சாரிரே வுண்டாக்கால் போகாதோற் உள் காச்சல் பிரமியங்கள் கண்டாக்கால்
பித்தம் போம் காண்.

21. காணி ஆடாதோடை கண்டங்கா வித்ரளசி பேணி பிட்டாக்கிவத் தேனிற் பிசைந்த மேல்
கொள்ள கக்குக கெண விரும்பும் காசமீளை யிரும்பல் போக்கு போக்கென வெறடும்
போதை.

22. பொதிரடா தோடை இலை பொந்த பொரு முந்திரிகை சோதியினிற் ஊடி நிற
செய்திடி நிரமாத்திரியாயி அக்காறம் கூட்டி அருந்திரநத்திய பின் வுக்காதக்காது
பித்தம் ஓடும் உருகின்ற தாளிசையும் பத்திரியும் கொளமொடு கெருகின்ற நாகப்பு
திப்பிலியும் மாருகின்ற சுகை நீரெலமுடன் கூட்டும் லவங்கமுடன் பாகமாய் குரணத்தே பன்.

23. பன்னிய பின் சர்க்கரையும் பாதகம் பெதகம் கூட்டி என்னை இரு கழஞ்சி தேன் விட்டு
ந நென வெளுவிலிடக் காங்கள நன்னு விரேசிகமும் பூளி நிடம் விட்டோடிப் போம்.

24. போமே கடுகு நெல்லி பொதிதிய தான்றி சிங்கி எமாஞ்சி கோஷ்டம் ஏலமுடன்
பூமேவும் திருகடுகு இந்தப்பு தேக்கிட்டனே கண்டங் காலி அரிய வடித்த வடி செய்.

25. தானே கடப்பம் விரை தப்பாமலே கழஞ்சு மானே வெந்நீர் தனிலே வாங்கினால்
ஊனே சொல் எழு நாயரும் கிறந்தி யீளை எலி கடியும் விருமே என்றை மித்தை
வேண்டு.

26. வேண்டும் வேலிப் பருத்தி சாரும் விளங்குமங்கு நின்ற சென்ற ஆமணக்கின் என்னையுடன்
பாண்டமதில் யிட்டு வடித்தன்ன யீளை சுவாசமுடன் திரண்ட பொடி தேனில் அருந்திடவே
தஷ்ட்ட திணம் செய்யும் சுவாச க்ஷய காசம் கெட்டனவே போகுமெனக் கேள்.

27. கோறம் கையாந்த கரை சாறுழக்கு கடுக்காய் ஆமிந்த நல்லென்னையில் வடித்த குணம்
தின்விற் பலரும் சேத்துமத்தால் வந்த பிணி சொன்னேன் போந்தேன் மொழியே தா து.

28. நா தவளையின் பழஞ்சாற் சுத்த நெய் பால் தாறுமதில் திரிகடுகு சீரகமு மாதே
கேள் காரேம் நாள் கொள்ள காச சுவாச மீளை பாறெனவே பேசிவிடும் பார்.

29. பத்தியாய் நார்தன் பழம் சாற் திரிபலையும் தேருந்திரு கடுகு தேக்குடனே கூறக்
கேள் தேத்தான் பழஞ்சாரு தேன மிதிற் கூட்டி யுன்ன மாத்தரிய காச சுவாசமாரும்.

30. மாறம் தொடைச் சாரும் வுந்தாவின் நெய் பாலும் தேரு மிரு திப்பிலியும் சேர்த்து
நீ கூறுகின்ற கொடிவேலி தேறுடனே கூட்டி யவச்சாரம் அடவாக நீ வேகவை.

31. வேக வைத்த நெய் கொள்ளில் மேவும் சுவாச காசம் பாக பயிரெத்த பித்தம்
பார் பரிபந் தேகத்தில் வந்தொரு மேகம் மத்து மிரு சுரமும் விந்தை எண்ணி விட்
டோடிப் போமே.

32. பொருந்தன்ன நீரில் பொரு முதியாள் கூந்தல் அரிந்தே அரிந்தே அகன் வேரரைத்து
மருந்தன்ன மாரும் சுர மெய் குளிருமாவே மொழி மடவீர் தீரும் சுரமே போமே
திசை கெட்டே.

33. கட்டை வெள்ளி கக்கிருன் வேரு கழற் மிளகும் கூட்டி இள வெந்நீரில் கொன்டு விடில்
நாட்டை விட்டுப் போ மே அசீரணமும். போக முதிர்ந்ததிலல் நாமே யுரைத்த
மிக நன்று.

34. சமித் தயிரும் பதனை தப்பாமல் காய்ச்சி அமுக்கி அவன் குழியில் வைக்க அமரிக்
களமாய் சாரும் விசுவி தனரும் தண்ணீர் தாகம் தீருமே திண்ண மிர செப்பு.

35. எல்லாம் கிறத்தி எழும்பி வரும் வாத பித்தம் சொல்லாத சேத்துமத்தில் தோன்றி
எழுப வில்லாரும் நீள் புருவம் தாலே நிறந்த கருப்பானம் மெல் புவியோர்க்குள்ளோர்க்
கியம்பு.

36. எயம்புந் திமிற் வீக்கம் எங்கு மதிஉஷ்ட்டி கயம்பு கணுக்கள் கருப்பம் பயம் பெறவே
வந்த மரை கிரத்தில் வாத கரப்பான் வீக்கம் செந்தமரை முதக்கா செப்பு.

சீருஞ் சிவனுர் பெரு மருந்தும் செங்கத்தாரி மிளகும் இவை கொள் கறப்பானேகுமென்ற.

38. எங்கும் கருநொச்சில் எத்த மிஞ்சில் சாருக்கி யாக்கும் கறந்தை சின்னியா மணக்கும் பாதமற வடியிற வசம்புள்ளி வாளம் ரேகனி இரண்டும் குடியிற் பசிற் கரப்பான் ருத்தம்.

39. தின்றும் சிற குறட்டை தேங்காய்ப் பால் சங்குள்ளி தன்னந் தனிந்தினி பெசபற உழக்கு மன்று கேள் ஆமணக்கு நெய் கடுகுரேகனியிற் காச்சியுண்ண சாமந்தவிற்கு மதை சாய்க்கும்.

<u>உள் காச்சலுக்கு:-</u>

பொன்னுங்கன்னி, முசுமுசுக்கை புதிய தாளி பழம் பாச்சி நன்னிய புலா இலை சாரும் நறுக்கி தேவி சித்தாமுட்டி முன்னை தாழை முளைச்சாறும் முந்த பாவம் மிளகு நரு மன்றுன் கொடி அதிமதுரம் வகையுடன் நெல்லி சீரகம் கூட்டே.

கொத்தமல்லி நாகப்பூ கொடிய வெத சீனி சர்க்கரையும் அமுகு மஞ்சள் சென்பக பூவுத்த குரணந்தான் செய்தால் உள் காச்சல் மிகவே யோடிடுமே.

<u>வயிறு கடுப்புக்கு:-</u>

இடுப்பு கடுத்து வயறு ளைத்து இருக்கும். சீதம் மந்தித்தால் முருக்கும் ஐபரம் மதிமுகமாய் முன்னே மேகம் கறித்தடங்கும். மடுந் தொரன்னந் தலைத் தொடார் மறவே மெலிந்து உலர்ந்து வரும். தொடுக்கும் வயத்தில் கடுப்பு, தொப்புள் சொன்னற் செய்யும் துயற் கண்டே.

<u>இதுக்கு மருந்து:-</u>

நெய் தேனில் புிசையும் கிறத்தி மலை தாங்கி பகரும் வேப்புலா முத்தம் வசம்புங் காடு முனிந்த கக்கோக்*கேஞ்சுளா*குத் சக்கொடாரி விடையம் முனிந்த சீரகம் முதகருமாய் தனித்த கைப்புகும் முந்திரிகை தானே கழஞ்சு கொண்டு நெய்யில் வழிந்த வேகவத்தருக்கும் மானே வயத்தக் கடுப்பருமே.

<u>பித்த வாய்வுக்கு:-</u>

"ஆடு நெருடன் மிளகு திப்பிலி துய்ய தாளிச பத்திரி மிக்க முந்திரிகை
மிக்க முந்திரிகை கூகை நீருடன் விளங்கு சீரகம் ஏலமும்
வொக்கவே சரி சர்க்கரையுடன் உண்ட போது கொள் வியாதியை
பக்க வாய்வுகள் சத்தி குன்மமும் பித்த வாய்வும் விட்டோடுமே.

<u>ரத்த பிரமியத்துக்கு மாந்தத்துக்கு மருந்து:-</u>

குத்தி இவரை நருக்கி பசும் பாலில் பிசைந்து வடி கட்டிக் கொண்டு அதில் சர்க்கரை கலந்து எருக்கம் வேர் கொண்டு வந்து பஞ்சு போல் நருக்கி பாலில் பிசைந்து மூன்று வேளை கொடுக்க ரத்த பிரமியம் போம்.

<u>மாந்தத்துக்கு:-</u>

ஒருத லை. உள்ளிப் பூண்டு பாதி மோடி வசம்பு தேற பாதி மிளகு. பரு, ஜீ குவிளங்கொழுந்து வேலிப் பருத்தி இலை வேர், சாற்வளை வேர், குப்பமேனி இலை வேர், நாய் வேளை இலை வேர் இது வெல்லாம் சமருக கூட்டி பசுவின் நெய் விட்டு பதத்தில் விட்டு வடித்து தாய் முலைக் காம்பிலும் பிள்ளை நாவிலும் தடவி முலைகொடுக்க மாந்தம் தீரும்.

<u>நரம்பு, சிலந்தி பல் நோவுக்கு கெந்தகம் தயிலம்:-</u>

ரசம் விராகன்.க, கொண்டு வந்து பொடுதலை சாத்தில் முரித்து வெத்திலை யில் தடவி புண்ணின் மேல் வைத்து கட்டி நாலா நாள் அவிழ்த்துப் போடவும். புழு விழுந்து போகும்.

<u>பல் நோவுக்கு கெந்தக தயிலம்:-</u> கரு ஊமத்தின் வேரும், கெந்தகமும் இது இரண்டும்

சரி சமானமாக சேர்த்து அரைத்து குழப்பி மெல்லிய சீலையில் தடவி திரி போலே திரித்து விளக்கில் கொளுத்தி ஒரு சட்டியில் பிடிக்க தயிலம் விழும். அந்த தயிலத்தை பல் நோவுக்கு வெத்திலையில் தடவி பல்லு நோவு தீரும்.

அண்ட வாதம் விரை வாதம்:-

சூரிய டிபாளம் இந்துப்பு நவாசாரம் கடல் நுரை கோஷ்ட்டம் எலுமிச்சம் பழம் சாத்தில் கொறிக்க வைத்து பசவும் வாதம் தீரும்.

கலைகொம்பு பற்பம், பவள பற்பம், சங்கு பற்பம், மிருதார் சிங்கி பற்பம்:-

கலைக் கொம்பு கொண்டு வந்து கத்தரிச்சு அதை எடுத்துக் கொண்டு உருந்து நால்படி எருமைத் தயிரிலரைத்து அதில் அந்த கொம்பைப் போட்டு பிசறி ஊற வைத்து மறு நாளெடுத்து ஒரு ஓட்டில் வைத்து புடம் போட்டு எடுத்து மறுநாள் வெள்ளாட்டு பாலில் அரைத்து பில்லை தட்டி உலர வைத்து புடம் போட்டு எடுக்க பற்பமாகும். அதை வைத்துக் கொண்டு அதின் பிறகு பவழத்தை எருக்கம் பாலில் ஒரு நாள் ஊற வைத்து ம நாள் கழுவி எலுமிச்சம் புளியில் ஒரு நாள் ஊற வைத்து மறுநாள் கழுவிப் போட்டு பாப்பார முள்ளி கொண்டு வந்து பிடித்து அதில் பவழத்தை புடம் போட்டு எடுத்து வைத்து கொள்ளவும். சங்கு கொண்டு வந்து லவணம் அரைத்து பசி வெய்யிலில் ஒரு நாள் வைத்து மறுநாள் புடம் போட்டு எடுக்க பற்பமாம்.

மிருதார் சிங்கி கொண்டு வந்து கட்டியாய் லவணமரைத்து மேலே தடவி வெய்யிலிலே உலர வைத்து மறுநாள் புடம் போட்டு எடுக்க பற்பமாம். இந்த பற்பம் நாலும் கட்டி ஏகமாய்க் கலந்து வைத்துக் கொண்டு தேனில் கொள்ளவும்.

சீரக சூரணம்:- வாய்வு பித்தம் சகலத்துக்கு மாகும். மேகத்துக்கு மாத்திரம் கொடுக்க லாகாது. இது தப்பிலலை என் அறியவும். வாய்வு வடை சா..வன் பிணிகள் சேராது. காயம் நெகிழாது. கண் குளிரும். ஓயாமல் காநவக மயிலேகன் கண்ட திப் பொழுதே சீரகத்தை விந்து மிக வுண்டாகும். சடக்கெனவே மும்மலமும் தள்ளி விடும். கடுக்காய்க்கு வாத பித்தம் மையருக்கும் வன்னி எமு வாலிபமாம். சாதி சிற காலையிலே தான் சுக்கு சூரணம்.

சுக்கு சூரணம்:-

சுக்குக்கு தா ச மிரும், சொல்லரிய தீபனமாம். மிக்க சுவாசம் போம். மெல்லிய லாய் தக்க தொரு மூக்கு நீர் பாய்ச்சல் போய் மூல ரோகத்திரோடு தாக்கியதோர் நீர்கள் போகுந்தான்.

இஞ்சி சூரணம்:-

இஞ்சிக்கு வாதம் போம். இருமல் இவை சேராது. வஞ்சிக்கு செபந்தலீ மாத்தி விக்கும். அஞ்சிக்கும் சூலையுடன் ஆரோசிகம் தொத்தாது சொல்லுங் கால் வேலணை கண்ணாய் விளம்பு.

நீரழிவுக்கு:-

ஆவாறனந தவிர் கலமதம் கொன்றை வேர் நிவேரைந்து குடிப்புளி மோருடன் புளிரைந்து புனல் காவேரி போலவே தான விரைநது வரிும் தவிர்க்குமே. புளியின் பழந்தோல் ஆவாரை புவரசவ் தோல், நெல்லி முள்ளி அழிய குன்டை கான சாத்தில் அரைத்து மிகவே பருகுவீரேல் கிளி போன்ற மொழி மடவாய் கிளர்ந்த பெரு நீரடைப்பு கரும் ஒளியே கண்ட இருள் போலே யொளித்தே யோடி போய் விடுமே. மிண்டிய மெள்ள

மிண்டிய ஜென்னை மெள்ள கொடு சங்க ஈ அவலை சொண்டியும் நிலமுன்னி தவள சுண்டி நீருவுண்ட பின்னொரு திறம் யிரும்பலங் கொள்வீரும் தென்றமு மிருப்பன திறக்கமாய் கூறுறுமே.

கிடைத்தலை யளவிலே கிடை கிடை நீரவே விருடி யென யிரும்பலானதும் வெடிய தன்னளவிலே மிளகுடனுடன் பொருதலை கழந்து கொள் புருஷ ரூவிரே.

சுகுரு திப்பிலி துய்ய கருங் கொள்ளும் ஒக்க கொண்டொரு குளிகை முழுங்கிடில்
குக்குக்கெனக் கொல்லென்றிரும்பியே கொக்கு போல் வருவாற் துயில் போலொக்குமே.

நான்டிலே சுக்குடன் சங்கு தா தவளை கண்டிய கடுகுடன் கலந்து வெந்த நீர்
உண்ட பின்னொரு திறம் யிரும்பல் கொண்டிடில் தென்டாளும் பட்டு நான் திறனுமல்லவே.

மீண்டு கடுகொடு வெலை பொடியுடன் கொண்டு திரட்டி யிரட்டி குளத்தட
கண்டறும் உண்ட ஆசி காந்தாலுமம யொாயாப் பொன்று வாரையுடன் உண்டை காயளவு
உகந்து அரைத்து
தான முழம் வண்டார் குழலாள் செய்த தொரு மருந்து பறந்து ஓடுமே:

<u>குலம்பழ வறளைக்கு</u>:-

குலவகத்தில் நோவும் நெஞ்சுயிலே நோகும். யிரும்பல் காணும். சளி வாளை
நாற் போலே வரும். வாய் நாறும்.

<u>இதுக்கு மருந்து</u>:-

அப்புக் கோவை ஆகா கெருடன் கிழங்கு படுபாகல் கிழங்கு, புளியறளை கிழங்கு, நிலப்பனைக் கிழங்கு செக பெறன்டை கிழங்கு, காட்டு வாழைப் பட்டை வெள்ளை சிங்கை பட்டை பொருசப் பட்டை அத்திப் பட்டை திப்பிலி மூலம் கருஞ்சீரகம், வாய் விளங்கம், சுக்கு, மிளகு, உள்ளி, வசம்பு, ஈர வெங்காயம், கடுக்காய் இது வகை ஒன்றுக்கு விராகனிடை. கட்டி அரிசிப்படி விளக்கென்னையிலாக்கி கொடுக்கவும். பழவறளை தீரும். பத்தியம் கடிது.

சீரகம் பலம்.க, கஸ்தூரி மஞ்சள் பலம்.க, மோடி பலம்.க, வாய் விளங்கம் பலம்.க, சடாமாங்கிஷம் பலம்.க, தம்பராஷ்டகம் பலம்.க, மிளகு பலம்.க, லவங்கம் பலம்.க, அக்கலா காரம் பலம். அதிமதுரம் பலம். கடுகுரோகணி பலம் குரசாணி ஓமம் விராகனிடை.க, திப்பிலி விராகனிடை.ஊ, இது வெல்லாம் சேர்த்து இடித்து வைத்துக் கொண்டு பிறகு வெங்காய ரசம் ஒரு மானம் தும்மட்டிக்காய் ரசம் ஒரு மானம் விளக்கெண்ணை ஒன்னே கால் மானம் இது மூன்றும் கலந்து மெழுகு பதத்தில் இந்த காரம் போட்டு பதத்திலிறக்கிக் கொள்ளவும். பத்தியம் கெடுசு.

<u>ரத்த பழ வறளைக்கு</u>:-

இருமல் காணும். ரத்தம் சளியில் விழும். வாய் நாறும். அறட்டல் காணும். மக்க மெல்லாம் நோகும்.

<u>இதுக்கு மருந்து</u>:-

வெள்ளை காக்கிரு வேர் படுபாகல் கிழங்கு மிாகறளைப் பட்டை, பேய் சிங்கை பட்டை, பெரிய கொள்ள பட்டை, துரிஞ்ச பட்டை, தய நெல்லிப் பட்டை அருவா பிடி கிழங்கு, சித்த வரைக் கிழங்கு, முசுமுசுக்கை வேற்காட்டு நாற்கம் பட்டை காட்டு எலுமிச்சம் பட்டையும் பழமும் சித்தா முட்டி வேர் பேரு முட்டி வேர் சாறணை வேர், குப்ப மேனி வேர் மணத்தக்காளி வேர் இது வகைக்கு பலம்.க, தம்பாஷ்டகம் திப்பிலி, கஸ்தூரி மஞ்சள், நல்ல மஞ்சள், கடுகுரோகணி, கொத்தமல்லி, வாய்விளங்கம், கருஞ்சீரகம், வெங்காயம் இந்துப்பு* இது வகைக்கு பலம்.உ, சித்தாமணக்கெண்ணை ஒரு படி இது வெல்லாம் இடித்து சூரணம் பண்ணி என்ணை காய வைத்து வெங்காய முளை வாங்கிப் போட்டு பிறகு வெட்டு வகை போட்டு பதம் பார்த்து இறக்கி கடை சரக்கு பொடி போட்டு கம்பு முட்டாவில் எட்டு நாள் வைத்து எடுத்து சாப்பிடவும். பத்தியம் கடுமையாயிருக்கவும். கம்பு கஞ்சி காய்ச்சி குடிக்கவும்.

[illegible]
சாறணை விருத.

இதக்கு மருந்து :-

தீய நெல்லி பட்டை, பேய் சிங்கை பட்டை, நல்ல சிங்கை பட்டை, கிளாக்காய் பட்டை, நறஞ்ச பட்டை, பொளுரி பட்டை, தொட்டி முன்று பட்டை, மிளகு றணை பட்டை, மத்தி மறத்த பட்டை செம்பிரண்டை கிழங்கு, படுவா கிழங்கு இது வகைக்கு பலம்.க, ஓமம், மஞ்சள், கஸ்தூரி மஞ்சள் இது கூட்டி பொய் வறலாக வருத்து சூர்ணம் பண்ணி சாப்பிட மேகம் பழவறணை தீரும். பத்தியம் கடிது. இதக்கு பிஞ்சிறுல் நெக்கினி தழையும் பட்டையும் கசாயமிட்டு தயிலம் போலே காய்ச்சி இறக்கக் கொண்டு முன் சூரணம் கூட போட்டு கொடுக்கவும். அதின் பிறகு திப்பிலி, மிளகு, மோடி உள்ளி லவங்கம், கருஞ்சீரகம், கொத்தமல்லி, தாளிச பத்திரி, தம்பரஷ்டகம் இது வெல்லாம் பொடி செய்து வெருகடி பிரமாணம் வெந்நீரில் கொடுக்கவும். பத்தியம் கடுசாயிருக்கவும்.

மருந்தீட்டுக்கு :-

கண்டங்கத்திரி பட்டையுடன், பெருங்காரைப் பட்டையுடன் உருண்டை திரட்டி உருட்டி முழுங்கிட கொண்ட இருமலும் குடி விட்டு போகுமே.

குன்மத்துக்கு :-

அய்யாரு குன்மத்து கறப்பநேவாயிருக்கும். மெய்யாக சோறன்ன வேண்டாது. பொய்யாது. மேல் வயறு தான் பிறம்பும். மிக்க ஏப்ப முண்டாம். செலவல்லனைய கண்மடவாய் செப்பு. குன்மங் காணும் அரியக் கூழ் உப்பி இல்லாமல் காய்ச்சி வார்க்க. அம் மெழுகு பழவறணை தீரும்.

திப்பிலி பலம்.க, வெங்காரம் விராகனிடை.க, மோடி பலம்.வ, சுக்கு பலம். தும்பரஷ்டகம் பலம். பலவடிசிகை சுங்கு சக்கை பாப்பாற முள்ளி வேர்பட்டை ஏர் தலனை வேர்பட்டை முள் சுண்ட வேர் பட்டை இது வெல்லாம் இடித்து சூரணம் பண்ணி தேன் ஒரு சேர் காய வைத்து இது வெல்லாம் போட்டு லேகியம் போலே பண்ணி கச்சக் காய் பிரமாணம் சாப்பிடவும். உப்பு, புளி கை விடவும்.

சித்த பழவறணை :-

காச்சல் வரும். இருமல் காணும். வாய் நாரும். பக்க மெடுக்கும். கனி மஞ்சள் வர்ணமாகும் போலே வரும்.

இதக்கு மருந்து :-

மோடி சாதிக்காய், சாதிலிங்கம், லவங்கம், பெருங்காயம், ஏலம், தும்பரஷ்டகம், கஸ்தூரி மஞ்சள், ஓமம் கண்டு பறங்கி, வசம்பு மஞ்சள் பறங்கிப் பட்டை மிளகு இது கூட்டி பொய் வறலாக வருத்துக் கொண்டு இத்துடனே நெக்கினி தழையும் பட்டையும் கொண்டு வந்து பொய் வறலாக வருத்து கசாயம் வைத்து கொடுக்கவும். பத்தியம் கடுசாயிருக்கவும்.

இதக்கு சூரணம் முன் சொன்ன வகை பதினும் பெண்ணு ச்சட்டவை சுங்க சக்கை பலவடி சிங்கை தீய நெல்லிப் பட்டை பாருவா கிழங்கு திப்பிலி, சீரகம், கடுக்காய், தானிக்காய், வசம்பு இது வெல்லாம் சூரணம் பண்ணி செம்பிரண்டை ரசம் ஊதி வாங்கி அந்த சூரணத்தில் கலந்து எலி காரம் பொ சுத்தி பண்ணி பொரித்து சூரணத்தில் கலந்து தேனிலே யாவது செம்பிறண்டை. சாத்திலாவது கொடுக்கவும். பத்தியம் கடிது. நெல்லுக் கஞ்சி குடிக்கவும்.

செவிட்டு பழவறணைக்கு :-

புளியறணை அப்புக் கோவைக் கிழங்கு அமுக்குறாங் கிழங்கு சிந்தவரைக் கிழங்கு சிறு தமட்டி வேர், சிறு கீரா வேர், பருபாகல் கிழங்கு, நிலக்கடம்பல் வேர், நிலப் பனைக் கிழங்கு, வெள்ளை சாட்டறணை வேர், வெள்ளைக் காக்கிறுன் வேர், விழுதி வேர் பலவடிசிக்கை பலருக் காசி கிழங்கு காட்டு மஞ்சள், வேப்பம் பட்டை, சுன்டை பட்டை குதப் பட்டை, நரிஞ்ச பட்டை, புடங்கு நாரிப் பட்டை காட்டு நாற்த்தம் பட்டை,

விசாரி வேர் மெருகு சிங்கை, சங்க சக்கை, திப நெல்லிப் பட்டை மிளகுதலை பட்டை பன்னை வேர், செம்முள்ளி வேர், கண்டங் கத்திரி வேர், கருப்பாலை வேர், வட்ட திருப்பி வேர், ஊசி தகரை வேர் ஊசி கொட்டலான் வேர், மிலாவரை, கடம்பல்வேர், பொரிசு பட்டை இத வெல்லாம் கூட்டி சுத்திரிச்சு ஒரு முடாவில் போட்டு இரண்டு வள்ளம் தண்ணீர் விட்டு படியாக காய்ச்சி கடை செலவு தும்பராஷ்டகம், திப்பிலி மூலம், அக்கல காரம், கோஷ்டம், சாதிக்காய், சாபத்திரி, லவங்கம், ஏலம், சுக்கு, சீரகம், கருஞ்சீரகம், கடுகுரோகனி, கெண்டு பறங்கி, வாய் விளங்கம், மிளகு உள்ளி கஸ்தூரி மஞ்சள் நாகேசரம், மஞ்திஷ்டி மருட்டி மொக்கு குருசானி ஓமம், கசகசாபொக்ஷரம் லவங்கப் பத்திரி, தற்கோலம், வெப்பாலரிசி, வெங்காரம் இத வெல்லாம் இடித்து சூரணம் பண்ணி வருத்த முகதெள்ளை படி.உ, இதில் முன் வேர் தயிலமும் கூட்டி அடுப்பில் வைத்துக் கொதி வந்த பிறகு சூரணம் போட்டு பதத்திலிறக்கி உள்ளுக்கு கொள்ளவும். பத்தியம் கடுசாயிருக்கவும். செவிட்டுப் பழவாஸை தீரும்.

வெள்ளைக்கு மருந்து :-

மிளகுவலை பட்டை, எலுமிச்சம் காய் மாதிரி அரைத்து மூன்று வேளை சாப்பிடவும்.

இதவும் வெள்ளைக்கு :-

வெள்ளை குங்கிலியம் பலம்.க இதை பொடி பண்ணி நல்வெள்ளை விட்டுக் குமட்டி தண்ணீரில் போட்டு பிசைந்து எடுத்து வெள்ளைக்கு சுண்டைக்காய் பிரமாணம் இரண்டு வேளை ஐந்து நாள் சாப்பிடவும். இதவும் சுத்தாழை மடல் கொண்டு வந்து சாணியில் தரிச்சு நடுவே யிருக்கிற சோத்தை வாங்கி போட்டு அத பிடிக்கிற மட்டும் பச்சை பயறு போட்டுதும்பியில் அமைத்து வெந்த பிறகு எடுத்து அரைத்து எலுமிச்சங்காய் மாதிரி அரைத்து விகை காப்பிடவும். இதக்கு புளி மாத்திரம் விடவும்.

மருந்தீட்டுக்கு :-

எலுமிச்சம் பழத்தை நாலு கீத்தா கிழித்து வேலிப் பருத்திப் பாலூட்டி அதின் மேல் எருக்கம் பாலூட்டி அதின் மேல் சுண்ணாம்பு தடவி சுண்ணாம்பு குடுவையில் வைத்து மேல் மூடி சீலை மண் செய்து எட்டு நாள் புதைத்து மருந்திட்டு உண்டான பேருக்கு காலமே வயறு ரொம்ப மோரும் சோறும் சாப்பிட்டு அதின் மேல் ஒரு கீத்தை தின்னவும். வயறு பேதியாகும். இந்தப்படி நாலு நாள் கொள்ளவும்.

வலம் சலம் கட்டினால் பேதி மாத்திரை :-

கள்ளி முட்டான் கிழங்கு வைச்சு பசுவின மோரில் பிசைந்து வடி கட்டி அரைப்படி கொடுக்கவும். வலம் சலம் விடும். சித்தி இலை இருபது இதில் உப்பு போட்டு கசக்கி தட்டிடை மாதிரி சாறு கொடுக்க வலமிறங்கும்.

கடுக்காய்மய மேல் தோல் ஆள் பண்ணி நேர்வாளம் சுத்தி பண்ணின பருப்பு இத இரண்டும் கூட்டி எலுமிச்சம் புளியிலரைத்து கடலை பிரமாணம் குளிகை பண்ணி வெந்நீரில் கொடுக்க பேதியாம். பேதி மிகுதியானல் மோர் கூட்டவும்.

மூகர் பேதி காமாலைக்கு :-

எலுமிச்சம் பழம் நாலாக வகுந்து அதில் ஆந் பருப்பு நேர்வாளம் வைத்து மத்த நாள் முகந்தால் பேதியாம். எத்தினி தரம் முகந்தாலும் பேதியாகும்.

தும்பைச் செடி காப்புக் கட்டி செவ்வாய்க் கிழமைக்கு பொழுது இறங்கிற போது தும்பை இலையை பறித்து வந்து உள்ளி வசம்பு கூட முலைப்பால் விட்டு நசுக்கி உள்ளங் கையில் பிசைந்து மூன்று நாள் சாப்பிடவும். மூக்கில் பிழியவும். இந்தப்படி நாலு நாள் கொள்ளவும். காமாலை தீரும். பத்தியம் கடுசாயிருக்கவும்.

பயித்திய பித்தத்துக்கு :-

எருமைக் கிடா [illegible]

லெண்ணெ, வேப்பெண்ணெ இது இரண்டும் கூட்டி அதில் குரும்பியைக் கரைத்து உள்ளி, வசம்பு கூட்டிக் காய்ச்சி வடித்து உள்ளுக்கு காசிடை கொடுத்து மேலுக்கு பூசவும். பித்தம் தெளிவுயம். இறவும் பத்து மர்தம் காடியும் எலுமிச்சம் பிளியும் கூட்டி சர்க்கரை போட்டு உள்ளுக்கு கொடுக்கவும். மேலுக்கு சந்தனம் அரைத்து ஒரு வள்ளம் தண்ணீரில் கலந்து இருந்த நாள் உள்ளுக்கு கொடுத்து மேலுக்கும் பூசவும். எந்த பித்தமும் தெளிந்து போகும்.

மேகம் (உக)க்கு எண்ணெ:-

பழைய கம்பு குத்தி ஒரு நாள் பிளிக்க விட்டு மறுநாள் சுழாக்கி அந்த மாழைப் பெரிய சட்டியில் ஊத்தி அதில் தண்ணீர் நிறைய வார்த்து எட்டு நாள் புளிக்க விட்டு அந்த தண்ணீரில் முத்தக் கொட்டை வேண்டுமென்றது வேகப் போட்டு மூன்று நாள் உலர்த்தி இடித்து இளநீர் இருபது காய் தண்ணியும் புளிச்ச தண்ணீரும் ஏகமாய்க் கலந்து உலை வைத்து அதில் எண்ணெ யாக்கவும். இல்லாவிட்டால் முத்து வறுத்து இடித்து இளநீரும் புளிச்ச தண்ணீரும் கூட்டி ஆக்கிற விபரம் எப்படி என்றால் கொதிக்கிற முத்திலே முடக் கொத்தான் கரசிலாங் கன்னி பொடுதலை அந்த பசரை குப்பை மேனி செருப்படை துளசி இது வகைக்கு ரசம் சேர்.க, பசும்பால் சேர்.உ இது வெல்லாம் கொதிக்கிற முத்திலே வார்த்து மறுபடி வெள்ளைப் பண்டு பலம்.உ, வெங்காயம் பலம்.உ இதை நறுக்கி கொதிக்கிற முத்திலே போட்டு பிறகு வாய் விளங்கம் ஏலம் சீரகம், கருஞ்சீரகம் கடுகுரோகணி கடுக்காய், சுக்கு, மிளகு திப்பிலி மஞ்சள், கொத்தமல்லி, வெட்டி வேர், வெள்ளை தூபம் இது வகைக்கு பலம்.க இது வெல்லாம் இடித்து தெள்ளி கொதிக்கிற முத்தில் போட்டு களாவி இறுத்துக் கொண்டு அந்த எண்ணெயில் போடுகிற மருந்து லவங்கம் விராகனிடை.க சாதிக்காய் விராகனிடை.ங, ஏலம் விராகனிடை. கோரோசினம் பணவிடை.உல, குங்குமப்பூ பணவிடை.க, கஸ்தூரி பணவிடை. இது பொடி செய்து இந்த எண்ணெயில் கடச் கட போட்டு கலந்து ஒரு மண்டலம் சாலிய புடத்தில் வைத்து எடுத்து முதலே பேதிக்கு கொடுக்கிற பாவனை எப்படி என்றால் மூக்குறட்டை வேர் ஒரு மானம். கடுக்காய்.யஉ இந்துப்பு விராகனிடை.ஞ, பொடி பண்ணி வெட்டை பாக்கு.யஉ, இது மூன்றும் நறுக்கி படி தண்ணீர் விட்டு கால்படியாக காய்ச்சி காலமே இறுத்து இந்துப்பு பொடி போட்டு கொடுக்கவும். பேதியாம். அதின் பிற்பாடு எண்ணெ ஏழு நாள் சாப்பிடவும். பத்தியம் உப்பு, புளி ஆகாது. இதுக்கு போகும் வியாதி மேகம்.உக, வாய்வு.அய பித்தம்.ஙஉ பிரமியம் இது வெல்லாம் தீரும்.

சயித்தப் பிற மாத்திரை அறியவும்:-

ரசம், நாபி, கெந்தகம், விஷ பத்தி, கடுக்காய், சுக்கு, மிளகு, திப்பிலி வாய் விளங்கம், மஞ்சள், வேப்பிலைகோரைக் கிழங்கு, சித்திரை மூலம் இது வகைக்கு விராகனிடை.க, ரசம், நாபி, கெந்தகம் இது மூன்றும் சுத்தி பண்ணி இது வெல்லாம் கூட்டி வெள்ளாட்டு பாலில் ஐந்து நாள் அரைத்து கடலை பிரமாணம் குளிகை பண்ணி வைத்துக் கொண்டு சுரத்துக்கு இஞ்சி சாற்றில் கொடுக்கவும்.

சன்னிக்கு:- சுக்கு மிளகு, திப்பிலி இது கசாயத்திலிடவும். இல்லாவிட்டால் முருங்கைப் பட்டை மேல் தோல் கருக்கன் வேர் மேல் தோல் கசாயமிட்டு கொடுக்கவும்.

பாலர்க்க சன்னிக்கு:-

ஆவாரை அரைச்சு கசாயத்தில் கொடுக்கவும். கண்ணுக்கு தெரியாத பேருக்கு கரிசிலாங் கண்ணி சாற்றிலரைத்து விடவும். தேள் கடித்தால் எருக்கம் பாலி வரைந்து விடவும். இல்லாவிட்டால் நரை மூத்திரத்திலாவாது எலுமிச்சம் சாற்றிலாவது கொடுக்கவும்.

கண்ட மாலைக்கு: தண்ணீரில் அரைத்து தடவவும்.

வாத சுரத்துக்கு நொச்சிலை சாற்றிலிடவும்.

பித்த சுரத்துக்கு மாட்டுக் கோமியத்தில் கொடுக்கவும்.

கூடி பத்துக்கு அமுக்கிரா கிழங்கு சாற்றில் கொடுக்கவும்.

ரத்த பித்தத்துக்கு பிரமியத்துக்கு அமுக்கிரா கொத்தமல்லி சாத்திலிடவும்.
உப்புசம் இருமலுக்கு நெய்யில் கொடுக்கவும்.
செழுப்ப சுரத்துக்கு கோமியத்தில் கொடுக்கவும் இல்லாவிட்டால் அமுக்குறன் சாத்தில் கொடுக்கவும்.
நீர் கட்டுக்கு கழுதை நீரில் கொடுக்கவும். சர்க்கரை போட்டு கொடுக்கவும்.
வெள்ளை பிரமியத்துக்கு நெய்யிலிடவும்.
குன்மத்துக்கு நல்ல வெல்லத்தில் கொடுக்கவும்.
குஷ்டத்துக்கு காலி முடியில் அரைத்து தடவவும்.

இத்துடன் ஒரு சுவடி முற்றும்.

<u>விக்கல் சன்னிக்கு மருந்து</u>:-

அசமதாகம், திப்பிலி, ஏலம், லவங்கம், கொத்தமல்லி, கொடிவேலி வேர், நாகப்ப இருவேலி வேர், சுக்கு, குருசாணி ஓமம் மிளகு, இந்துப்பு இவை காசிடை கூட்டவும். திப்பிலி, வில்வப் பத்திரி, சாற் மாதளம் பிஞ்சு கூட்டவும் தீரும்.

<u>இருமலுக்குப் புகை</u>:-

கடுக்காய், தானிக்காய், நெல்லிப் பருப்பு, தேவதாரி, இவை பொடி செய்து சீலையில் பரப்பி திரிச்சு விளக்கில் போட்டு திரி புகை பிடிக்கத் தீரும்.

<u>நீரடைப்புக்கு சுரத்துக் கெல்லாம் உச்சிதமான மருந்து</u>:-

ஓரிலைத் தாமரை வேர், அரசம் பிசினும் அரைத்து பாலில் கொடுக்க நீர் விழும். கல்லுகளெல்லாம் விழும்.

<u>சுரத்துக்கு</u>:-

சாதிலிங்கம் விராகனிடை.உ, நெல்லிக்காய், கெந்தகம் விராகனிடை.உ, இது இரண்டும் பொடி செய்து குழாவில் வைத்துக் கொண்டு, சுக்கு கசாயத்தில் விடவும். வெட்டு மருந்து கசாயம் பெரு முட்டி, சித்தாமுட்டி நன்னாரி இதில் சொன்ன சுரம் உடனே தீர்க்கும்.

<u>கபாலஇடிக்கு</u>:-

சுக்கு, மிளகு, திப்பிலி, மரமஞ்சள், நல்ல மஞ்சள், சதாகுப்பி, கர்ப்பூரம் இது அனைத்தும் பொடி பன்னி சீலையில் தடவி சுட்டிக் காய வைத்து பிடிக்கவும். மண்டை இடி தீரும்.

<u>சன்னி வாத சுரத்துக்கு சன்னி ஆனந்த பைரவர்</u>:-

<u>பேதி யானந்த வயிரவலி</u>:-

பேத்த சுக்கு அரத்தையுடன் காசும் பெறக்கல வேற் நாற்றையுடன் கூட்டி யொத்த நொச்சி தன்றைகந்து பொதித்து நீர் இரு நாழியும் சேர்த்து எரித்து பின் செப்புடன் கொள்விறு சாந்தம் இது சேரும் சன்னி வாத சுரம் போமே.

<u>சன்னி ஆனந்தம்</u>:-

சாதிலிங்கம், வெங்காரம், நாவி, திரிகடுகு, ரசம் இவை வகைக்கு விராகனிடை.உ, எலுமிச்சம் பழஞ் சாற் விட்டரைத்து சிறு பயறளவு உருண்டை பண்ணி நிழலிலுலர்த்தி வைத்துக் கொண்டு இஞ்சி சாத்திலிட சன்னி பதினெட்டும் தீரும்.

<u>பேதி யானந்தம்</u>:-

சாதிலிங்கம், நாவி, மிளகு, திப்பிலி, வெங்காரம், கெந்தகம் வகைக்கு விராகனிடை.உ, நேர்வாளம் விராகன்.ரு, கடுகுரோகணி விராகனிடை.ல, கூட்டி எல்லாம் எலுமிச்சம் பழ சாற் விட்டு இரண்டு சாமமரைத்துக் கொண்டு வாத சுரம், பித்த சுரம், பழைய சுரம் இதுகளுக்கு இஞ்சி சாத்திலிடவும்

சுவாச காசத்துக்கு ஆடாதோடை சாத்தில் கொடுக்கவும். அதுவு மல்லாமல் ஆவாரை பூவை அரைத்து குளிகை வைத்து கொடுக்கவும்.

குன்மத்துக்கு:-

ஏலம், கோஷ்டம், அதிமதுரம், கருஞ்சீரகம், நல்ல சீரகம், தாளிச பத்திரி கிராம்பு, சாதிக்காய், சாதிபத்திரி, குருசாணி, ஓமம், அசமதாகம், கடுகு காந்தம் காயம், அரிசி, சுக்கு, மிளகு, திப்பிலி, மஞ்சள் இவை யெல்லாம் இள வறுப்பாக வறுத்து பொடி செய்து தேனில் கொள்ள வயறு பேதித்தால் உப்பு கஞ்சி கொடுக்க குணமாம். வாய்வு தீரும்.

வயற்றில் சர்வ வியாதிக்கும் திப்பிலி சூரணம்:-

திப்பிலி பலம்.உ, சுக்கு பலம்.உ, செவியம் பலம்.௩, சித்திர மூலம் பலம்.௪, வாய் விளங்கம் பலம்.௩, காயம் பலம்.௪, ஏலம் பலம்.ரு இலவங்கம் பலம்.ரு, கையாந்த கரைப் பொடி பலம்.ரு, லோகம் பலம்.௬, மத்ததெல்லாம் எடைப்படி கொண்டு சூரணம் பண்ணி சர்க்கரை கூட்டிக் கொள்ள இருமல் வாய்வு மந்தார சன்னி சகல ரோகமும் தீரும்.

குன்ம வாய்வு கட்டி கரைய:-

வெள்ளை வெங்காயம், சீரகம், அதிவிடயம்; அக்கிரு காரம், அசமதாகம் காயம் இதை எடுத்துப் பொடி பண்ணி தேனில் வெரு கடி பிரமாணம் கொள்ள கட்டி கரையும்.

குலைக் கட்டுக்கு:-

பறங்கிப் பட்டை பலம்.அ, பிறப்பம் கிழங்கு பலம்.அ, வெற்றிலை.ருங, பசுவின் பால் படி.ரு புதுப பானையில் பாலை ஊற்றி அதின் மேலே சீலை நனைத்து வேடு கட்டி மேலே வெற்றிலை அடுக்கி சூரணத்தை பரப்பி அப்படி அடுக்காக பரப்பி மேலே சட்டி கொண்டு மூடி வெற்றிலையும் பிட்டாக பிசைந்து சாப்பிட மிச்சா பத்தியம்.

கிரணி ஆனந்த வயிரவன்:-

நாவிலிங்கம், திரிகடுகு சமானம் கூட்டி பழம் சாத்தில் அரைத்து உருண்டை செய்து இஞ்சி சாத்திலிட சுரம் தீரும்.
பித்த சுரத்துக்கு முலைப் பாலிலிட தீரும்.

சுரம் ஆனந்த வயிரவன:-

சாதிலிங்கம், நாபி, கெந்தகம், வெங்காரம் திரிகடுகு வகைக்கு விராகனிடை.க, நேர்வாளம் சுத்தி பண்ணி எ இவை எலுமிச்சஞ் சாற்றில் இரண்டு சாமமரைத்து மிளகு பிரமாணம் உருண்டை செய்து நிழலிலுலர்த்தி இஞ்சி சாத்திலிட பயித்திய சுரம், புது சுரம், பழைய சுரம் குளிர் சுரம் தீர்ரும்.

சன்னி வாத சுரத்துக்கு:-

தேனிலிட மேலிரப்பு இருமலுக்கு ஆடாதோடை சாத்திலிட.
வயறு கழிச்சலுக்கு: ஆவாரம் பூசாத்தில் வெண்ணெயிலிட.

அக்கினி குமாரன்:-

ரசம், வெங்காரம், நாவி வெள்ளைப் பாஷாணம், கெந்தகம், நேர் வாளம் ஆக எகை இவை சமானமாக கூட்டிக் கையாந்த கரைச் சாறு விட்டு ஒரு சாமமரைத்து உளுந்து பிரமாணம் உருண்டை செய்து நிழலிலுலர்த்தி வைத்துக் கொண்டு இஞ்சிச் சாத்தில் திப்பிலி கஷாயத்தில் சுக்கு கஷாயத்தில் கொத்தமல்லி கஷாயத்தில் ஆடா தோடை. பிட்டு ரசம் இதனில் சரீர பலம் அறிந்து வியாதி குணமறிந்து ஒரு உருண்டையிட இப்படி மூன்று நாள் இட தீரும் வியாதி வாத சுரம், பித்த சுரம், சேத்தும சுரம், சன்னி சுரம் முன்முறை மாறல் அதிசீறல சுரம், வாய்வு சுரம், தோஷம் அமுர்தம் விஷம் இவையெல்லாந் தீரும். பத்தியம்.

சுரம் -க்கு மாத்திரை:-

சுரம் -க்கு மாத்திரை:-

திரிகடுகு, வேப்பிலை சாறு விட்டரைத்து குன்று மணி பிரமாணம் உருண்டை பண்ணி வேப்பிலை சாத்தில் ஒரு உருண்டை இட வேதி கண்டால் நிறுத்தவும். சுரம் தீரும்.

அயில் பட்டை சூரணம்:-

அயில் பட்டை சாட்டறணை வேர், முக்கறட்டை பலம்.க இது வெல்லாம் சூரணம் பண்ணி வெருகடி பிரமாணம் கொள்ள இதுக்கு தீரும் வியாதி வாத குன்மம், வலி குன்மம், பித்த குன்மம், எரி குன்மம், சூல குன்மம், சத்தி குன்மம், சேத்தும குன்மம்வாந்தி குன்மம், சோகை குப்பை நீரேம்பல், நீர்க் கோர்வை, குடல் வாதம் சோகை தீரும்.

உப்பு ஒரு பங்கு பிரண்டை இரண்டு பங்கு கலந்து சட்டியிலிட்டு சீலை மண் செய்து அடுப்பிலே இரண்டு சாமம் எரிக்க பற்பமாம். நெய்யில் கொடுக்க அ விஷ்ண குன்மம் தீரும்.

பல் செட்டை கிறந்திக்கு:-

மாவுலிங்கம் இலை.எ அரிந்து வெள்ளிரில் உள்ளுக்கு கொடுக்க பத்தியம். பசுவின் பால் சோறும் அகனம் பண்ணவும். உப்பு, புளி ஆகாது.

கிறந்திக்கு:-

சாதிக்காய்.ய, கிறம்பு.ங, ஏலரிசி விராகன்.க, திப்பிலி விராகனி:க, கண்டத்திப்பிலி விராகனிடை.உ, கச்சூர விராகன்.கரு, வங்காள மஞ்சள் விராகன்.கரு பறங்கிப் பட்டை விராகன்.ஙரு, சிகப்பு கோழிக் கீரை படி.க, இதை யெல்லாம் பொடி செய்து இலை கூடப் போட்டு எலுமிச்சம் பழம் சாத்தில் அரைத்து ஊதத முறல் கொண்டு வந்து அதை எடுத்து காய போட்டு சரக்காக்கி இடித்து அந்த தூள் பலம்.உ, பாஷாணப்பு பலம்.க, இது இரண்டும் எலுமிச்சம் பழம் சாறு விட்டு அரைத்து எடுக்க மெழுகாகும். வாதத்தால் கொண்ட பிடுங்கல் தீரும்.

பேதி மாத்திரை:-

நேர்வாளங் கொட்டை.உய, கடுக்காய்.சய, சுக்கு.ய, நேர்வாளத்தை சட்டியில் காய வைத்து வறுத்துக் கொட்டை வெடிக்கிற பதத்தில் எடுத்து இது மூன்று வகையும் நிம்பழம் சாத்தில் அரைத்து சுண்டைக்காய் பிரமாணம் உருண்டை பண்ணி நிழலிலுலர்த்தி வைத்துக் கொண்டு இள வெந்நீரில் ஒரு உருண்டை கொடுக்கவும் பேதியாகும். சகல பேருக்கும் குழந்தைகளுக்கும் கொடுக்கத் தீரும்.

பேதி ஆனந்த வயிரவன்:-

சாதிலிங்கம், நாவி, மிளகு, திப்பிலி, வெங்காரம், கொத்தமல்லி வகைக்கு விராகனிடை.உ நேர்வாளம் விராகனிடை.ரு, கடுகுரோகணி விராகனிடை.ங, இது வெல்லாம் கூட்டி எலுமிச்சம் பழம் சாறு விட்டு இரண்டு சாமமரைத்து குன்று மணியளவு உருண்டை பண்ணி உலர்த்தி சன்னி வாத சுரத்துக்கு இஞ்சி சாத்திலிட சுவாச காசங்களுக்கு ஆடாதோடை சாத்திலிட சர்வ விஷங்களுக்கு அவரி சாத்திலிட கணத்துக்கு கோரோசனை கோட்டகம் அதிமதுரம், திப்பிலி, தேவதாரம், சீரகம், கஸ்தூரி மஞ்சள், கடுகுரோகணி அரத்தை சந்தனம், ஏலம், மாசிக்காய், வெந்தியம், சுக்கு வகைக்கு பலம்.க விளக்கெண்ணெயில் எரித்து வைத்துக் கொண்டு பிள்ளைகளுக்கு கொடுக்கவும். தொழுப் பிடுங்கி வந்த கொட்டைப் பாக்களவு சாந்தரைத்துப் புழுங்கலரிசித் தவுட்டில் கலந்து மூன்று வேளை கொடுக்க தாவம் தீரும்.

நீராழிவுக்கு:-

ஆவாரை வேரை கலைக் கொம்பு தேனும் பச்சைப் பாலில் கொடுக்க தீரும்.

நீரடைப்புக்கு: பத்துக் கடுக்காய் இளநீர் விட்டரைத்து கூடக் கலந்து குடிக்க வயறு

விடும். நீர் விடும்.

வெள்ளைக்கு மருந்து:- 22.2.63.

இலைங் கொழுந்து கொண்டு வந்து இடித்து சாறு பிழிந்து மூன்று நாள் கால்படி சாறு கொள்ள தீரும்.
பத்தியம் கடினம்.

மாந்த சுரத்துக்கு:-

சீந்தில் தண்டு கடுக்காய் அவரை வேரும் கத்தாழைக் காய், சுக்கு ரேகலியும் காயநீரில் கலந்திட்டு எந்திக் கழு முலையாள் இளநீரை விட்டொன்றுக்கி கொள்வீரும் மாந்தம் போகும். வயறு கழியும். வலன்மையாகும். கண்டரே.

மேகம் 20-க்கும்:-

கலியான ஞுரு ஆம்பல் நெல்லிக்காய் சாறு படி.க, சர்க்கரை பலம்.உரு கரைத்து வடித்து கொன்னை வேர் பட்டை பலம்.க, அரைத்து பாகாய் காய்ச்சி இதில் திப்பிலி, கொடிவேலி வேர், கொத்தமல்லி, வெப்பாலை அரிசி, விழாலரிசி, ஏலம், ஓமம் சீரகம், மிளகு வகைக்கு பலம்.க, கடுக்காய் , நெல்லிக்காய், தானிக்காய் வகைக்கு பலம்.உ, விடத்தேரி பூ படி.க இடித்து வஸ்திர காயம் பண்ணி ந் பாகில் தூவி நல்லெண்ணெ படி.வ, கூட விட்டு கிண்டி இறக்கு காலமே ஒரு நெல்லிக்காய் அளவு கொள்ள பிறமேகம் .உக உடம்பு எரிப்பு எலும்புருக்கி விடநு பாகம், போலே பெரும்பாடு ஏதெது வருகிறதும் தீரும்.

இதிலே ஆவாரை பஞ்சாகம் கூட்டி கொள்வும் பத்தியம் கடினம்.

வண்டு கடிக்கு தயிலம்:-

துளசி வேர், சங்கம் வேர், விழுதி வேர், காட்டுக் கோவை வேர், தகரை வேர், வேப்பம் வயிறம், கொடிவேலி வேர், பூவரசம் வேர், நொச்சி வேர், குட்டிருப் வேர் கூட்டி தயிலமிறக்கவும். காசளவு திட்டம். நான் தின்னவும். சிறுப் வண்டுகடி பட்டை வண்டு இது வெல்லாம் தீரும்.

மகோதரத்துக்கு:-

சீனிக்காரம், வெங்காரம், சவுக்காரம், நவாச்சாரம், படிகாரம், இந்துப்பு பொட்டிலுப்பு சீயக்காய், கல்லுப்பு கடுகுரோகணி கடுக்காய், பெருங்காயம், சித்தரத்தை கொடிவேலி இது இடித்து சூரணம் பண்ணி வைத்துக் கொண்டு தும்மட்டிக்காய் சாறு படி.க, மாவிலிங்கப் பட்டை, சதிர கள்ளி பட்டை இது நருக்கிச் சாற் வாங்கி எரித்த பதத்தில் சூரணம் பண்ணிப் போட்டு விளக்கெண்ணெ கொஞ்சம் விட்டு லேகிய பதத்தில் இறக்கி கெவுஞ்சி கெச்சுக்காய் பிரமாணம் கொடுக்க பத்தியம் கடினம். உப்பு, புளியில்லாமல் மோர் நீர் காய்ச்சி சாதம் கொடுக்க பசுவு மோர் கூட வெந்நீர் கூட்டவும்.

இந்த பாண்டு ரோகம் செய்யும் குணம்:-

இருக்கையிலே இளைப்பு முண்டாம். நெஞ்சது துடி துடிக்கும். மருவியே வயறு காறும் மந்தமே பத்திருக்கும். வெறுத்து சிரு கிருத்த முழிகள் வெளுர்த்த வீங்கும்.
மருவி பித்த பாண்டு ரோகமென்று உரைக்கலாமே.இந்தக் குணமெல்லாம் பார்த்து பித்த பாண்டு குணமென்று அறியவும்.

இது வனமூலிகை:-

கையாந்த கரைச் சாறு காட்டு மல்லிகைச் சாறு, முசுமுசுக்கை சாறு, முடக்கொத்தான் சாறு, ஆடாதோடை சாறு, குப்பி சாறு, நிலாவரை சாறு, நொச்சி சாறு வேலிப் பருத்தி சாறு, எலுமிச்சஞ் சாறு, பிரமி இலைச் சாறு வகைக்கு படி.வ, கடைச் சரக்கு திப்பிலி, திப்பிலி மூலம், செவியம், தேவதாரம், அசமதாகம், வாய்விளங்கம், கொத்தமல்லி, கடுகுரோகணி அதிமதுரம், மிளகு, கோஷ்டம், அரத்தை, சீரகம், கடுக் காய் இரும்பு, காந்தம், சிட்டம், அரப்பொடி வெள்நள்ளி, பேய்புடல், நெல்லி முள்ளி வகைக்கு பலம்.க இடித்து அரைத்து அந்த சாத்தில் போட்டு லேகிய பதமாக கிண்டி

லேகியம் கொடுக்கிற சமயத்தில் நய பலம் சர்க்கரை தேனும் விட்டுக் கிண்டி இரண்டு நேரம். ஒரு நாள் பாக்களவு கொள்ள பாண்டு விழு பாண்டு மஞ்சள் காமாலை, பித்த உன்மம், வாய்வு இவைகள் தீரும். பத்தியம் கடினம்.

### புண்ணுக்கு :-

ரசம் பலவிடை, பசு விராகனிடை.க, வெள்ளை சாட்டரணை வேர் நருக்கி சாற் விட்டு தலை ஒரு ஒரு காசிடை அரைத்து வழித்துக் கொண்டு எந்த புண்ணுக்கும் போட எரிந்தாலும் அனலில் கார்ச்ச தீரும். கோவை சமனையும் நெருஞ்சி வேரும் பொடி செய்து வாயில் போட வாய் திறவான். தலையில் தேய்க்க வருவான்.

### கண்ணில் எழும்பின வியாதிக்கு :-

கடுக்காய், வசம்பு, கோட்டம் திப்பிலி, மிளகு, மரமஞ்சள், சக்கு பொடி, தானிக்காய், மரேசிலை வகைக்கு விராகனிடை.க, வெள்ளாட்டுப் பாலில் அரைத்து கண்ணிலிட காசம் படலந்திமிர் நிலவு நெரிமேல் தெளிப்பு மாசற் தீரும். ஐம்பது பூவானால் நய நாள் போடவும்.

### சர்வ வீக்கத்திற்கும் கசாயம் :-

மாமாலை தண்டு சீந்தில் தண்டு கோவைத் தண்டு நன்னாரி நெருஞ்சி சிறு தீரை நீர் முள்ளி கண்டு பறங்கி, சுக்கு, சித்தரத்தை, தாளிச பத்திரி இது செய்ய தீரும்.

### வில்வ வேர் தயிலம் மருந்து :-

சாந்தமாம் வில்வ வேர் தயிலம் கேளும். தானை வில்வ வேர் பலந்தா பத்து பாய்ந்த மாம் பிடித்ததலை பதக்கு நீரில் பருவாக காய்ச்சி பக்கே யெட்டொன்றுக்கி போயிந்த எண்ணை நாழி விட்டு புகழ கெழும் பொகதாகே சந்தனந்தான் அரைக்கப் போடு புண்ணியனே இதை எல்லாம் ஒன்றாய் கூட்டி புளிசிகமாய் தலைலிலிட்டு மெழுக்காய்க் கொள வெற்றன மா வரும் பதத்தில் வடித்து கேளும். வாகாக முழுகி வர வன்மை கேளு.

வரிசையாய் முழுகி வர பித்தம் போகும். வரிசை பெற மெய்யிலுள்ள உஷ்ணம் போகும். இளமை பிற வாக்கி விக்கும் மேகம் போகும். இரு கண்ணும் தெளிவு தரும். இருமல் போகும். வுளமை தவிர் ரெத்த பித்தம் ஓடிப் போகும். உறவறச்சி அங் சுரங்கள் ஓடிப் போகும். தளமாக இஷ்டம் போம். தயிலம் சொன்ன சம்பிரதாமாய் தாயமடா தகிந்து போமே.

### எலி கடிக்கு :-

மாவிலிங்கம் பட்டையை வெட்டி மேல் பிரணி சீவிப் போட்டு ஒரு கொட்டை பாக்களவு நெய்யில் நல்லெண்ணை விட்டுக் கொடுக்க தீரும். வெய்யில் படாமலிருக்க இது கை கண்டது. இந்த பட்டை ஆனாக்கி பசும் பாலில் கொள்ள எலி கடி தீரும். சுக்கு, சுருஞ்சீரகம் வகைக்கு பலம்.ரு இதை பென்ன் வறலா வசக்கு கசாயம் வைத்துக் கொள்ளவும் தீரும்.

வீக்கத்துக்கு :- ஒன்றரை வீசம் படி சாராயம் கொண்டு வந்து தெசாவறம் அரைத்து மூன்று நாள் கொள்ளவும். மேலுக்கு ஊமத்தை சாற் பூசவும். பத்தியம்.

### புருஷனுடன் வாழாதவளுக்கு :-

பொன்னரி விராகனிடை.க, கற்பூரம் விராகனிடை.க, முள்ளிக் கத்திரிக்காய் சாறு விட்டரைத்து தாழம்பு காம்பு நீர் விட்டு அரைத்து நல்லெண்ணையில் மத்தித்து தலையில் தேய்க்கவும். புருஷனுடன் கூடி இருப்பாள்.

### காமாலைக்கு மருந்து :-

சிக்காமலைக்கு இலை அரைத்து பசுவின் கோமியத்தில் கொடுக்கவும் தீரும். ப

ஆனந்தக் களிப்பு :-

அத்தி முகனைத் துதித்து நல்ல அன்பான வல்லாதியின்பமாய் சொல்வேன். சிங்கர மூலம், வெள்ளறுகு, நல்ல சிவனார் வேம்படன், சங்கம் வேர், குப்பி முக்கிய தேங்காயின் விந்து, நல்ல மூலமாம் கெருடன் அமுக்கிரு வேரும் புத்தில் முளைத்த வெள்ளெருக்கும் நல்ல சதிரான செங்கத்தாரி குண்டி வேர் பட்டை உச்சித் தெப்பாலைப் வித்து நல்ல ஊர்வான நீர் சுண்டி பிரப்பன் கிழங்கும், சித்த மகிழ்காரிய சீரகமும், நல்ல சிறப்பான காளை சீரகமும் நாலும் முத்தின பூத விருசுடம், நல்ல முதலான வாத கரப்பாலிடை பட்டை கத்தி கெந்தகமரு திருசு நல்ல சதிரான சுத முத்து தக்கமும் சேர்த்து சித்திரமாக எடுத்து நல்ல சிறப்பான வகைக் கொரு பலமும் நிறுத்து வித்தாரமான ப்னையெல்லாம் நல்ல விளங்கிய என்று வகைக்கு சேர் கொண்டு முத்தின செங்கொட்டை நாலு, நல்ல முதிர்ந்த பறங்கிப் பட்டை, பலம்.௨, கைக்கிடமாக பிடித்த பின் கர்த்தாவை நோக்கி முன் தீபம் கொடுத்த சித்திர வல்லாதி யென்ற முனி செப்பினர் சீடருக்கு உபதேசமாக பத்திரமாக எடுத்து புது பாண்டத்தில் வைத்து நிறை பாக்களவு உருண்டை மண்டலம் இரு போது கொண்டால் நல்ல மார்க்கமாம். வியாதி யே வழுக்குவரப் போமே.

முத்தின சூலை கிரந்தி, நல்ல முடக்கு, கடப்பு பிடிப்பு, கிமிர், பத்தின
பத்தின மேகங்கள வாதம் நல்ல பாங்கால் கை தனி ஊற வெருப்பு
வத்தின உடம்பு சிறங்கு நல்ல வகையான புழு வெட்டு கடி விஷம் முதலாய்

சொத்தி திமிர்த்த வெள் குஷ்டம் யாவும் சொல்லாமல் போகுமே வல்லாதி கண்டால்
பொத்தி கடி போல் வெடித்து நல்ல புண் போலுடம்பெல்லாம் வல் போலரித்து.
கொத்தி கிழித்தது போலே நல்ல குய பாதத்தில் கீறல் வெடித்து
அத்திக் கெறந்தி ஜெக்காய் என்ற ஆறும் பறங்கிப் புண் ஆன ஜெய்க் கெல்லாம்
சித்திர வல்லாதி கண்டால் நல்ல சிக்கின்ற பக்ஷி பறக்கின்றுப் போலே பத்தியமாய் சொல்லுவேன் கேளும்.

நல்ல பாசிப் பயறு, துவரம் பருப்பு, முத்தின கத்திரி பிஞ்சும்,
நல்ல முருங்கையின் பிஞ்சம் அரைக்கீரை தாளும் சாதாவின் பாலு நெய்மோரு
நல்ல சதிரான வெள்ளாடு விரால் மீன் குறவை சித்திர ஆமைக்கெண்டை
நல்ல சீரான பொரு முழுகு வாய் என்று பித்தனை நோய் தீருமென்று ரிஷி.
இன்பமாய் சரச் சொன்னவர். பாதம் வல்லாதி முற்றும்.

மகா வல்லாதி செய்ய மருந்து :-

சொல்லுகிறேன் கேளப்பா மகா வல்லாதி செகமெல்லா மெச்சுதடா இது தானப்பா முனி உரைத்த வல்லாதி சொல்லக் கேளு கேளப்பா சாதிலிங்கம் பலம். நதான் மூன்றும் சிறந்ததொரு நெரி பாஷாணம் பலந்தான் மூன்று கடிதமுள்ள ரசம் நாவி பலந்தானஞ்சி பொரியள வெண்காரம் பலந்தான் மூன்று சுருககான காந்தமரு பலந்தான் மூன்று கூறின என மருந்தொன்றுக்கு சுத்தி பண்ணித்த வாங்கே.

வாங்கியே போகாமலின்னம் சரக்கு சொல்வேன் கேளப்பா பறங்கிப் பட்டை இடித்து தான் சேர் காலென்ற சென்ற தொரு எட்டி கொட்டை சேர் தான் மூன்று அடுத்த தொரு நீர் முத்து சேர் தான் மூன்று அரிதான செங்கொட்டை சேர் தானஞ்சி வனித முன்னோர் சாதிக்காய், இரும்பு பலந்தான் மூன்று யிதமுள்ள வால் மிளகு பலந்தான் மூன்று கிருதமுள்ள கருஞ்சீரகம் பலந்தான் நாலு புகள்கின்ற தாளிக்காய் சேர் தான் மூன்று படர்ந்த தொரு செந்தரி பட்டை இடித்த தான் சேர்தான் மூன்று சிவ சிவ சிவன் வேம்பு சரியாய்க் கூட்டே.

கூட்டின மருந்தெல்லாம் ஒன்றாய் சேர்த்து ஆசி பெற்ற குருவைத் தான் மனதில் வைத்து அறகல் கல்லுரலில் ஆயிரம் தரம் இடித்து வாங்கி இடிக்கையிலே நல்லெண்ணை இரண்டு படி விட்டு இடித்து வாங்கே. வாங்கியே பாக்களவு உருண்டை செய்து நோய்களுக்கு இந்த வல்லாதி உருண்டை கொள்ளே.

கொள்ளவே நோய் தீரச் சொல்லக் கேளும் கெடிதமுள்ள பதினெட்டு குஷ்டம் தீரும். [illegible] வயாக்கினைத் தீரும். பறந்த தொரு மேகத்தில் பிறந்த

கடி விடமுந் தீரும். கிரந்தியுடன் கிரணி ஆறு வகையும் போச்சு. வெகு நாளாய் நின்றதொரு கர்மம் போச்சு. சடலத்திலுண்டான தடிப்பு போச்சு. வாதாதி வந்த நோய் மேகமெல்லாம் போச்சு. காயங்கரு நித்த தோடா கலங்க வேண்டாம். முண்ட தொரு மண்டலமே கொண்டாயானல் அறகரு மாந்துளிரது போல் மேனியாச்சு. நை போகம் ஆகாது. புளியாகாது. தள்ளப்பா மாமிசத்தை புகையிலையும் தள்ளி செகத்திலே வயித்தியர்கள் யின்னால் கிட்டாதப்பா பாடினேன் ஆயிரத்தி நாத்க்குள்ளே மகா வல்லாதி கருக்குதனை கண்டால் பாடும் மகா வல்லாதி முற்றும்.

கண் மருந்து:-

வானத்தின் மீதும் வனமறிவான் கன்னிகமும்
யேனத்தின் கொம்பும் யிறவரிவான் நெஞ்செலும்பும்
ஊனி முதகெலும்பும் ஞருக் கருத்தின் பல்லும்

கானக் குறத்தி முலைப் பால் விட்டரைத்து கண்ணிலிட காச மாந்தொன்றா த் தாறும் நலமாகப் போகு மென்னுர்.

பொன் அரிதாரம் பலம். ச கட்டி அரிதாரம் பலம். , நொச்சியிலை பலம்.ச, சாதிலிங்கம் பலம்.உ, மிருதார் சிங்கு விராகனிடை.உ, இதகளைக் கலியான பூசனிக்காய் சாத்தில் சருக்கு கொடுத்து மறபடி சித் தட்ட சுத்தி செய்து அதின் பிச்சு நீர் விட்டு சுத்தி செய்து கெசபுடம் குகையிலிட்ட பசு வென்ணெயில் பணவிடை கொள்ள சர்வ மதன மந்தார காசம் தீரும். கை கண்டது. ரெத்த*பிறமியத்துக்கு

ரெத்த பிரமியத்துக்கு:-

புளியறணை வேர், நன்னாரி வேர், பொன்னுவகன்னி வேர், ஓரிலைத் தாமரை இலை பசும் பால் கலந்து சர்க்கரை போட்டுக் கொள்ளவும்.

அகஸ்தியர் குழம்பு:-

பேசியே மருந்து கேளும் பெருங்காயம் கடுகு இந்துப்பு
வீசி மறம் பொற காரம் விசு மஞ்சேசிலையும் கட்டி
ஆசிலந்திப்பிலி அரிதாரம் கருகுரோகணி
மாசிலா கருஞ் சீரகமும் வகை வகையா கழஞ்சு கூட்டி வாளமும் வருத்துப் பாதி காங்சி யே பச்சை பாதி சமன் முனை நீக்கிப் போக்கி ஓங்கியே மோரும் சோறும் உண்டு நீ அரைத்துக் கூட்டே. கூட்டியே மருந்து பேர் அகஸ்தியர் குழம்பதாகும்.

ஈட்டிய விரை யஞ்சுக்கு யிரும் பல்லி கடுக்காய் சாறு
வாட்டியே குளிர் சுரங்கள் வகை சுக்கு மிளகு தாளில்
பட்டி விலத்த மூலம் ஆவி நெய் மெத்தை பாலில்.

பாலிறம் மொழியாய் ஆனி கேளும். பாண்டு மகோதரம் பெருவயறு
மேலினி யாம்பல் சோகை முளகு தான் வெள் வெங்காயம்
சனலவே சன்னிக்கெல்லாம் தேன் யிஞ்சு சாறதாகும்
மேலெரும் சன்னிக் கெல்லாம் வேம்பினில் கன்னில் தீட்டும்.
யிடு கன்னில் கடுகில் பாதி கடுகியே வீங்கிடும்
கத்தாழை சோறு வடிதையில் சந்தனங்கள் வைத்து நீ கட்ட மாறும் படு பருப்பினவை வானை பக்கரையாப்பு புன்கள் விடும் பெரு சிலந்திக்கெல்லாம் உமி நீரில் மிகவும் புசே. புசிடு முலைக் குத்துக்கும் கூசிய வாத சூலை அஷ்டடங்கள் நொச்சி சாறு பாசமாம் வாதம் வாய்வு பலமான நோய்களெல்லாம் மாசில்லா யிஞ்சு சாறும் மரு மரு சரக்கு நொச்சி பாரே.

பாரப்பா கபால வலி முதலா பிசாசு மே பறக்கும் பாரு கிரி புகை நீர்க் கடுப்பு நீர் சுரப்பு, நீர் கல்லடைப் புன் தாழை விழுது கரு கிரந்தி பறங்கிப் புன் முதலானது தீரும். குப்பி சாறு தனில் தீரக் கடுப்பு பல விடமும் தீரும். தீரும் கண்டவாறே பிடிக்கும் திரிபுகை முன்னரைத்த அம்மிதனில் பிரட்டிய சீலை தனில் யிடிக்கும் வலிக்கும் தமுற் வாதம் யிக் குமல்லிக்கு மதி கிரி கட்டி கொடுக்குங்கிலியம்

வெள் வெங்காயம் கொடிய களச்சி முசுமுசுக்கை படிக்கும் சன்னி பதினெட்டு அநுபான
செயனால் விதியார்.

<u>பிள்ளை உண்டாக</u>:-

சொன்னா மடவாள் தங்களுக்கு சுகமாய்க் கெர்பம் வரும்படி கேள்
பின்னே அரசன் கொழுந்துடனே மிகவே ஆவின் பால் கூட்டி
முன்னோர் குழம்பில் பணவிடை தான் மூட்டி மூன்று நாள் கொடுக்க
பொன்னே புத்திருண்டாகும். புவியோர்க்குறுதி கண்டீரே.

கண்டிற் நாவல் பட்டை தனில் கரப்பாட்டு பால் தனில் சுரசம்
கொண்டே சீரகம் பொடியுடனே கூட்டிக் குழப்பி பணவிடை தான்
உண்டால் குதகம் தன்னில் வரும் உயர்ந்த வாய்வும் உள் தீரும்
வண்டார் குழல் சேர் மடமானே மலை சேர்முனி தான் வகுத்ததுவே.

வகுத்த பிரமன் வகையாலே வருமே குசிகா வத்தமுடன் திரட்சியான கட்டிகளும்
தீரும் வகைதான் நீர் கேரும் பகுத்த நொச்சி சாருடனே பஞ்சாரனை மிளகு சுக்கு
தொகுத்த குழம்பில் பணவிடை தான் கொள்வீர் சொன்னேன் கொள்வீரே கொள்ளும்
பிறதி பசுவுக்கு கொடுக்கு மருந்ததனைக் கேளும். உள்ளி முருங்கைப் பட்டையுடன்
உயர்ந்த புங்கு எருக்கம் வேர் வீள்ளவரி நா திருகு கள்ளி விரை சேர் இஞ்சி சுரசமதில்
தெள்ளுங் குழம்பில் பணவிடை தான் சேர்த்துக் கொடுகக வலி தீரும். வலியே செய்யும்
நீர்க் கடுப்பு மாற மருந்து வகை கேளாய் நவியா மிளகு பொரிகாரம் நன்கு பொரிய
கண்டுடனே மெய்யெரெண்டு விராகனிடை மெய்யா ஆவினெய் தனிலே புளியறனை குழம்பில்
பணவிடைதான் புகழ்ந்தே கொடுக்கப் பிணி போம் விதியே விதியால் மருந்து இது
வல்லால் வேறே மருந்து வேண்டாங் காண் பதிய மிதக்கு குறிப்பறிந்து அநுபானம் கண்டு
செய்தால் சதியாய் வந்த நோய்களெல்லாம் தானே மெகந்து ஓடிடுமே. மதியாய்
நோய்கள் தீர்ந்து விடும். வாழ்வாய் சொன்னார் விரை முனியே.

விந்து வேள் குருமுனிவந் செயநீருக மேக நாராயணன் செந்தூரம் செப்பக் கேளும்
கெந்தக அத்த குதங் கெடியான சாதிலிங்கம் பலந்தான மூன்று அந்த மால் தேவிராகன்
இரண்டு ஆனந்த நொச்சியிலை ரெண்டரையதாகும். பைந்தொடி வாய் சுத்தி பண்ணி நிறுத்துக்
கொண்டு பண்பாக கல்வத்திலேத்து வாயே.

யேத்துகின்ற யெருக்கம் பாலி புறசெலைச் சாற் யிலை தும்பை செருப்படை சாற் செம்
முள்ளிச் சாற் புத்த மாதவி யிலைச் சாற் அந்தப் பூச்சாற் புகழ் முருக்கன் பூச்
சாத்தில் வகையொ வேண்டில் நேத்தியதாய் சாமமொன்று அதற்கு வாங்கி
குப்பிக்குள் மணமே செய்து வாயி திறவளாரிலா மருந்தே பூட்டி வாமி பகலங் கொண்டே
மணமும் செய்வாயே.

செய்த பின்பு வல்லவற கட்டி தன்னை சேர்க்கநுல் விறலுக்கு மண்லே கொட்டை
வைத்திடவே குப்பி தன்னை நாட்டி வைத்து பதறாமல் டேமட்டும் மணலே மூடி சயமராய
அடுப்பேத்திறுலாறு சாமம் அதிமமல் முன் போலே எரித்து நத்து வெய்யவே வயிறவன்
பூசை செய்த வேண்டியே குப்பியை எடுத் கொடைத்துக் கொள்ளே.

உடைத்தெடுத்த செந்தூரம் பற்பமாகும். உத்தமனே முருக்கம் பூ நிறமே யாகும்.
உயருக திரிகடுகு, கண்டங்கத்திரி, தாளிசபத்திரி, திடம்படவே புட்டு வைத்து பிழிந்து தேனில்
செந்தூரம் பணம் பாதி தொஉடி பத்து குடர்ந்து நேர மூன்றும் தீரும் வியாதி
சொல்லரியக் கேளும் . காசமிதெல்லாம் போமே.

போகுமே மேக மிருமல் சுவாச காசம் பொல்லாத மந்தார சேத்துமம் ஓடும்
மூர்ச்சை மிக முன்னே கொல்லும் யிளப்பு சன்னி மூர்சையுடன் செயகாசம் முறிந்து
போகும். வாக்குள்ள திப்பி தேளர் பத்து நாளுன்ன வண்டுகடி முன் சூலை பதினெட்டுக்கு
விட்டு தீரும். தீரு மெங்கு புள்ளி குரை நோவு வீக்கம். செவ்வண்டு சிறங்கு முதல்
சிதறிப் போகும். சிதறி விடும் அரையாப்பு நெஞ்சில் நோவும் தீருத கண்ணோவு கபால

உசிரமுடன் வீக்கம் சுக சன்னி சிகா காத்தன்டரி கம்பிவிச்சோடும் மூனமாதா வெள்ளுள்ளி தயிலம் தன்னில் முசியாமல் பத்து நாள் பனைக்குன்ன பகம் சன்னி கொண்ணூக்தாற் வாதம் ஐம்பதும் போம். பக்கவலி வாதமுடன் யேகும் பாறேள் பாரிந்த செந்தூ ற மிாகு சுக்கு பாங்கான வெங்காரம் அசமதாகம் நேரிந்தபடி முருக்கம் பட்டை சாத் தில் நினவாக லோக செந்தூ ரத்தைக் கட்டி சேர வைத்து நாற்பது நாள் தொடர்ந்து தின்ன தெரிசன்னி குத்து வாதம் தனுக்கு வாதம் மேக வாதம் மோக வாதம், அந்தி வாதம், கானே. காறுத வாதமுடன் கொண்டல் வாதம் கல்லடைப்பன் சதையடைப்பன் நீரடைப்பான் உள் வலிப்பு, கிருகிருப்பு, நிலத்தில் வகையாக பனவிடைகாவ் கொள் வாறுகில் நீங்காத கெற்ப வினை நீங்கிப் போகும்.

நீங்குமே விப்புருதி கண்ட நீங்குமே விப்புருதி கண்ட கோற்வை
வாங்குமே விடூப்பாகம் பாண்டுரோகம் மாருத பெருவயறு நாபி சூலே
போங்கமுடன் தலையறிந்து செந்தூரம் கண்டால் போகுமே வியாதி பின் யெல்
தீரும்.

<u>மேக நாராயண பற்பம்: சாதிலிங்கம் கட்டு:-</u>

சாதிலிங்கம் கொண்டு வந்து பாப்பாசிசி கள்ளி பூவும் சாரும் சுருக்கு கொடுக்க மறபடி எடுத்து நாலு சாமம் சுருக்கு கொடுக்க சாதிலிங்கம் கட்டு படும். இதை அநுபானம் அறிந்து சன்னி பதிமூன்றுக்கு கொடுக்கவும்.

பிள்ளை யில்லாத பேர்க்கு நந்தியா வட்டம் அரும்பு அரைத்து முள்ளிக் காயள பசுவின் நெய்யில் சர்க்கரை கலந்து மூன்று நாள் கொள்ள பிள்ளையுண்டாம்.

<u>வெள்ளை பாஷாண கட்டு:-</u>

வெள்ளை பாஷாணம் வாங்கி வந்து சட்டியில் வைத்து சாரைப் பாம்பு கொழு சேர்.கு, விளக்கெண்ணை சேர். காட்டாமணக்கெண்ணை சேர்.கு இந்த இரண்டு எண்ணை யும் சுருக்கு கொடுத்து பிறகு சாரைக் கொழுப்பு சுருக்கு கொடுக்க பாஷாணம் கட்டு சகல சுரங்களும் தீரும். கை கண்டது.

<u>சர்வ மந்தார காச்சலுக்கு என்னை:-</u>

சாதிலிங்கம், தாளகம், கஸ்தூரி கோரோசினை, நல் பவழம் சாதிக்காய், பெருங்காயம், லவங்கப் பட்டை, கண்டு பறங்கி, சீரகம், பூண்டு சார், விஷ்ணு சா கிரிவால பூண்டு சார், கெருடன் கிழங்கு, மிருதார் சிங்கு, வெள்ளை பாஷாணம் திரிபாலை கடுகு இதுகள் சமானம் செய்து எண்ணெயில் வடித்து குட்டெடை கொள்ளவும்.

<u>குன்மம் எட்டுக்கு சூரணம்:-</u>

சங்குவீரு பலகரை நீரு, சிறுகுன்ன வாழைப்பூ, மேனிப் பூ, தென்னம் வேர், நாவரிப்பு, சுவரெட்டி நமாவி சாறம், பஞ்சலவணம், சீனிக்காரம், வெங்காரம் படிகாரம், சவுக்காரம், அக்கிரகாரம், ஆலான் விழுது சுட்ட சாம்பல், கள்ளி சாம்ப சதிரக் கள்ளி சாம்பல் இலைக் கள்ளி சாம்பல், அவுரி சாம்பல், உறச்சன் மனி சாம் பல், ஆகாச தாமரை சாம்பல், நீர் மேல் நெருப்பு சாம்பல் திரிபாலை சிறு மண்ணு ஒட்டடை கொடிவேலி சாம்பல் மாவுலிங்கம் சாம்பல் பெடலமருந்து பெருங்காய வாய் விளங்கம், ஓமம், வாளம், திரிகடுகு, களச்சிப் பருப்பு வகைக்கு பலம். இது யெல்லாம் இடித்து வடி கொண்டு தேங்காய் குடுக்கையில் அடைத்துக் கொள்ளவும். களிப் பாக்களவு தேகம் அறிந்து கொடுக்கவும். அஷ்ட குன்மம், அ, பெரு வயறு, நீராமை, நீர்கோவை, நிறகெண்டை வெப்பு வல்லா பாருவை வலை யத்தகுகி சூதம் இது முதலான நோய் குன்மங்களெல்லாம் தீரும். கை கண்டது.

<u>அரிதாரம் மெழுக்கு:-</u>

அரிதாரம் வேண்டியது வாங்கி வந்து சுன்னத்தில் சுத்தி பண்ணி வெள்ளைக் குன்டு மணிப் பருப்பு அரைத்து குகை செய்து குகைக்குள்ளே வைத்து அந்தக் குகை கொண்டு

அந்தக் குகை கொண்டு மூடி சிவந்தசித்திர மூலம் அரைத்து கீழ் மேலும் மூடி சித்தாமணக் கெலெ சுக்கிலும் கவசம் போலே கட்டி தாழை ஓலே சுத்தி உமிக் காந்தலில் வைக்க மெழுகாகும்.

அரிதார பற்பம்:-

அரிதாரம் வேண்டினது வாங்கி வந்து பேய் முட்டி சாறு வார்த்து அரைத்து வில்லெ செய்து உரலில் போட்டு மூன்று நாள் காயப் போட்டு செருப்படி சா குகையில் விட்டு புரசன் சாம்பல் கொட்டி மேல் சீலே மண் செய்து இரண்டு விரட்டியில் புடம் போட்டு எடுகக பற்பமாம்.

சகல ரோகங்களுக்கும் சகல காசங்களும் தீரும்.

சுக்கு, சீரகம், மிளகும், ஓமம், பொன்னிறமாய் வறுத்து இடித்து சூரணம் பண்ணி வெருகடி பிரமாணம் கொள்ளவும். இச்சா பத்தியம்.

பெரும்பாடு புண்ணுக்கு:-

பொடுதலே பூ வாய்க் கொண்டு வந்து பேசாமல் பிடுங்கி வந்து கம்பரிசிக் கஞ்சியில் அரைத்து உள் கொள்ள கை கண்டது.

ரசக் குளிகை:-

ஊமத்தன் காயும், பூவும் கொண்டு வந்து புத்து மண் கூடப் போட்டு அரைத்து முட்டை போலே குகை பண்ணி அந்தக் குகை காய வைத்து எடுத்துக் கொஞ்சம் சாறு குகைக்கு குள்ளே விட்டு பிறகு காய விட்டு கஞ்சாப் பொடி குகையில் போட்டு முக்கழஞ்சு சுரம் விட்டும கஞ்சா பொடி தூவி சீலே மண் செய்து குக்கில் போடவும் பிறகு எடுத்துப் பார்க்க குளிகை யாம். பிறகு கருவூமத்தின் இலேச் சாத்தில் ஏழு நாள் தடவி காய விட்டு ---- தட்வி அதிலே துவைச்சு ஏழு நாள் பிறகு வெள்ளிக் குகையில் குளிகையில் வைக்க தம்பனமாம்.

காந்த கட்டு:-

மலேக் கத்தாளையைத் துளைத்து அதுக்குள்ளே காந்தத்தை வைத்து இறுகக் கட்டி சீலே மண் செய்து புடம் வைக்க காந்தம் கட்டுப் படும். சோகை வியாதிகளுக்கும் மற்ற வியாதிகளுக்கும் ஆகும்.

துருசு சுன்னம்:-

நிச்சயமாகச் சொல்வோம் நிமலனுர் துருசு போக்கு
வச்சதோர் வங்கத்தாரி எடைக்கிடை கிருத வாத்து
மெச்சு மிந்கிடைக்கு நல்ல வெடியுப்பு கூட கூட்டிடு
உச்சயம் வாய் நீராலே வூறலரைக்தரைத்திடாயே.

வட்டமாய் யோட்டில் வைத்து வளையவே சீலே செய்து
திட்டமாய்க் குக்கிடத்தில் சென்றிட சுன்னமாகும்.
சுன்னத்தை வாய் நீராலே சுத்தியே அரைத்துக் கொண்டு அன்னறை கட்டி துருசு
அப்பி யொற்வியில் போட்டு முன்னதோர் மூன்று நாளில் முழு வெண்ணையாகும் பாரும்
பொன்னெத்த சீலே செய்து போட்டிடு காரையென்றே.

எனறத்தை எடுத்துப் பாரு யியலுள்ள சுன்னமாகும்
கன்றத்தைக் கண்டபோது கலிவெல்லாம் நீங்கிப் போகும்
பன்றதை ரசத்துக் கால் பணவிடையாககாக கொண்டு தாய் நிலமா பாகம்
என்றுரைக்கேன் கோடா கோடியும் யிதக்குள்ளாக வாடியே மங்க வேண்டாம் வைக்கிடும் துருசு சுன்னம்.
தேடியும் கிடையாதப்பா தெருவெல்லாம் கிடைக்குமோ தான் சொல்படியும் படித்து மென்று பத்திறம் படுத்தி வையே.

சத்த அமுர்த மாத்திரை:-

ரசம் கெந்தகம் விராகனிடை.உ, திப்பிலி விராகனிடை.உ, ஏலம் விராகனிடை.உ,
..... விராகனிடை.உ.

அரப்பொடி விராகனிடை.உ, மலாக்கு கட்டை விராகனிடை.க. எல்லாம் விலாமிச்சன் வேர் இடித்த நீர் விட்டு ரவியில் விட்டு பிசைந்த அந்த தண்ணீர் விட்டு பிசைந்த சாம மரைத்த ஒரு விராகனிடை உருண்டை செய்து வைக்கவும். இதக்கு அநுபானம் மேக சுரங் கு்க்கு தேனம், திப்பிலியும் கூட்டி யிட மேகங்க்கு சீரகம் ஏலம் கூட்டி கூட்டி நீர் கடுப்புக்கு சீயமுகின்ற கிரந்திக்கு கழனி நீரில் கொடுக்க எரிவுக்கு தயிரில் கொடுக்க ரெத்த பிரமியத்றக்கு ஆவாரை அரிசியும், சீரகமும் இளநீரும் கூட்டி இடவும். கற்பூரம், ஏலம் சாதிக்காய் கிரம்பு மிளகு நவ்ருய் பொடி செத் தேன் விட்டரைத்து இருபத்தொ உருண்டை செய்து குறட்டிடைக்க சிலேட்டும சன்னி தீரும்.

<u>சங்காதி மாத்திரை</u>:-

சுக்கு, சுட்ட நீர் பலம்.க, மலாக்கா சந்தனம் பலம்.க, இது இரண்டும் தண்ணீர்விட்டரைத்து கடலை பிரமானம் உருண்டை பண்ணி வைத்துக்கொண்டு கல்கண்டு சர்க்கரை சீரகம் உருண்டை செய்து உய நாள் கொடுக்க நீரழிவு வெள்ளை நீரடைப்பு, சதையடைப்பு சகல மேகும் தீரும். *ு[illegible]*[illegible]:-

<u>வாய்வுக்கு உருண்டை</u>.-

திரிகடுகு, .நற்சீரகம், நாய்க் கடுகு, இந்துப்பு, பெருங்காயம் ஆக வகை வகைக்கு விராகனிடை.க, கடுகுரோகணி விராகனிடை.உ இது வெல்லாம் வருத்து இடித்து எலுமிச்சம் பழ சாறு விட்டகரத்து தேத்காங் கொட்டை பிரமானம் இரண்டு வேளை கொள்ளவும். கட்டும்.

<u>வங்காதி மாத்திரை</u>:-

குரோசானி, ஓமம், சாதிக்காய், சாபத்திரி, அதிவிடையம், கிராம்பு, சமஅக கூட்ட மேனிச் சாறு விட்டரைத்து மிளகு பிரமானம் உருண்டை பண்ணி உலர்த்தி பொன் முசுட்டை வேர் கசாயத்தில் ஒரு உருண்டை கொடுக்கவும். சகல கிரணி கழிச்சலும் தீரும்.

மேக வெட்டையினுல் வெள்ளை விழுந்தால் வான மருந்து பொடி செய்து கோழி முட்டை.க, வெள்ளைக் கருவில் மத்தித்து கொடுக்கவும். மருந்து கொடுக்க ஒரு சாமம் மட்டும் தண்ணீர் தொடாமல் இருக்கவும். இச்சா பத்தியம். உப்பு, புளியாகாது.

<u>கலிக்க மாத்திரை</u>:-

காயம், அரிதாரம், கடிய வசம்பு, பேய்பீர்க்கு, சிறுதிப்பிலி, வெள்ள மிளகு, சேர்த்து உரைத்துக் கண்ணிலிடவும். [illegible]

<u>வெட்டை வெள்ளை சங்கு பற்பம்</u>:-

சங்கு கொண்டு வந்து உடைத்து எலுமிச்சம் பழம் சார் விட்டு ஊற வைத்து மறுபடி எடுத்து கழுவி ஏழு சீலையில் உப்பு அரைத்து கடவி சங்கு சீலை மண் செய்து இரண் முழக் குழி கெல்லி புடமிட பற்பமாம். இதை பசுவின் பாலில் கொடுக்க பத்தியம். நாள் மாறு பத்தியம். யரு நாள் இதக்கு தீரும் வியாதி மேக வெட்டை சல பிரமிய ரத்த பிரமியம் உள்ளுருக்கி நீர்க் கடுப்பு, ரத்த நீர் நீர் காரை எருவு புண்ணிருக்கிறதும் தீரும். கை கண்டது.

<u>கிறந்தி வகை குலை வகை அரையாப்பு</u>:-

அலக்க கெறந்தி, கொள கிரந்தி, பதகெறந்தி கடிவிஷ கிரந்தி, கருங் குட்ட கிறந்தி, வெண் குட்ட கிறந்தி, அரி கிறந்தி, பொரி கிறந்தி, அ கிறந்தி, கெற் கிறந்தி, சீழ் மூலை கிறந்தி, கள்ளி புண் கிறந்தி, லிங்க புத்து கிறந்தி, வெடி குலை கிறந்தி அரை தாற கிறந்தி அண்ட பவுத்திர கிறந்தி, தேத்காங்காய் கிறந்தி, தாமரைக் காய் கிறந்தி குட்டக் கிறந்தி, செம்ம கிறந்தி, மண்டைக் கிறந்தி, ஓடு கிறந்தி, எரி கிறந்தி அத்திக்காய் கிறந்தி, வாய் கிறந்தி, மூலை கிறந்தி ஆக கிறந்தி ங உ வகை. குலைக் கு பேர் வ

சூலைக்கு பேர் வகை:-

வாத சூலை, பித்த சூலை, பித்த சிலேஷ்ட சூலை, வெடி சூலை, பிளி சூலை, மண்டை சூலை, எரி சூலை, கெர்ப்ப சூலை, சத்தி சூலை, வறசூலை ஆக சூலை பத்து.

அரையாப்புக்கு பேர் வகை:-

கோவைக்கா அரையாப்பு வாழைக்காய் அரையாப்பு ஆமை அரையாப்பு, நெரி அரையாப்பு, மூளை அரையாப்பு ஆக அரையாப்பு.ரு.

கருங்குறவை அரிசி படி.வ, தண்ணீர் நனைய ஊற வைத்து பிறகு எடுத்து உரலில் போட்டு இடிக்கும்போது கோவைத் தண்டு சிறுக அரிந்து ஒரு பிடி கூட போட்டு இடித்த பிறகு ரசம் விராகனிடை.ய, கூட விட்டு மூன்று நாள் இடிக்கவும். நாலா நாள் எடுத்து புதுச் சட்டியில் போட்டு இளங் காச்சலா வைத்து எடுத்து கலசத்தில் வைத்துக் கொண்டு இந்த வியாதிகெல்லாம் ஒரு விராகனிடையாக ஒரு நாளைக்கு மூன்று வேளையாக மோரில் கொடுக்கவும். இப்படி மூன்று நாள் ஒன்பது வேளை கொடுக்கவும்.

வாய் சூலை கட்டினால் மருந்து கொடுத்த ஏழா நாள் கருவேலம் பட்டை இடித்து பச்சை தண்ணீர் வார்த்து முழுகவும். இப்படி நாலு நாளைக்கு ஒரு தரம் முழுகி வரவும். பத்தியம் மோரும் சோறும் பச்சை தண்ணீர் வெள்ளாட்டு உப்பு கண்டம் கலைக் கீரை சுண்டை வத்தல் உப்பு, புளி பாக்கு வெத்திலை, எலுமிச்சம் அருகாய் நெல்லிக்காய், ஈர வெங்காயம், மிளகு, மிளகாய், சீரகத் தண்டு, கருவாடு மீன் பசுவின் நெய் இது வகை கூட்டிக் கொள்ளவும். வயறு கடுப்புக் கண்டால் வெள்ளாட்டுக் கறி உப்பு அவித்த தண்ணீர் குடித்து கறியும் தின்னவும் வயறு கடுப்பு நிற்கும்.

மஞ்சள் கருவேப்பிலை, கோழிக்கறி, பாகல் காய் பசலிக்காய் வாழைக்காய் இலை, கடுகு வெந்தியம், சீரகம், சந்தனம், புலடை ஸ்திரிகள் சேரலாகாது. நாற்பத்தஞ்சு நாளைக்கு ஆகாது. கிறந்தி சூலை அரையாப்பு கெண வியாதி கழுத்து வியாதி இது வெல்லாம் தீரும்.

அரையாப்பு கரைய ரச பற்பம்:-

காட்டாமணக்கு கிழங்கு ஒரு பாக்களவு தின்ன மூணு நாள் பாக்குடனே தின்ன கரைந்து போகும்.

ரச பற்பம்:-

ரசம் பலம்.உ, உப்பு படி.உ, புதுச் சட்டியில் கொட்டி செங்கல் ஆள் மேல் கொட்டி கோழி முட்டை கருவில் மேனி அரைத்து குகை செய்து காய வைத்து அதில் ரசம் விட்டு மூடி சிவு பிரமாணம் தலாரம் செய்து இதில் வைத்து மேல் சட்டி கொண்டு மூடி சீலை மண் செய்த அடுப்பு மொழுகி தீப ரூபம் கொடுத்து கோழி அருத்த கனவதி முன்பா அடுப்பில் வைத்து ஒரு விறகா எரிக்க நாழிகை.ஙய, மும் எரிக்க எடுத்து மேல் சட்டியில் பத்தின சூரணத்தை சுரண்டி கொள்ளவும்.

மேக வெட்டை வெள்ளைக்கு:-

செம்பருத்தி இலை பிடுங்கி வந்து நீச்சு தண்ணீரில் பிசைந்து அரை மண்டலம் சாப்பிடவும். இச்சா பத்தியம்

புண்ணு களிம்பு:-

வேப்பம் பட்டை பலம்.க, மிளகு பலம்.வது நல்லெண்ணை படி. பிளாஸ்திரி செய்து போடவும் ஆறும்.

பிள்ளைகள் மாந்தை எண்ணை:-

பெருந தும்மட்டிக்காய் சீவி பருப்பிலே அரிந்து விளக்கெண்ணையில் போட்டு மூன்று நாள் வெய்யிலிலே வைத்து மறுநாள் எரித்து எண்ணை இருத்துக் கொண்டு ஒரு தட்டெடை கொடுக்கவும். மாந்தம் போகும்.

குன்மம் எட்டுக்கும் மூவண செந்தூரம்:- ஆடு தின்னாப் பாளை வேலிப் பருத்தி ... இடித்த சாறு பிழிந்து

தேவையான கல்லுப்பு எடுத்து இந்த சாறு விட்டரைத்து வில்லை செய்து காய வைத்து ஓட்டிலிட்டு ஓடு மூடி சீலை மண் செய்து ஐந்தெருவில் புடம் போட்டு இப்படி மூன்று புடம் போடவும். தேனில் நெய்யில் கொடுக்கவும். குன்மம் எட்டும் தீரும்.

முறை தொற பொறசம் விரை வேப்பயிற்கு முப்பிரண்டை ஓமம் மிக சமனு காக்கி சுக்கி யிதை இரு நாழி தண்ணீர் விட்டு கொழு நீறு காய்ச்சி யிதை பாகல் நீரும் மிக்க பக்கி நின்றுக் கிருமி யெல்லாம் கும்பிட்டு கூண்டாக பயந்தை விழ்க்கு புற பறப்பு திரவு நீங்கி சுத்தமுமாம் முண்டில்லுரைக்க வரும் சொன்ன நிறைகையான தொழுநமாமே.

வெள்ளை பாஷாணம் சுத்தி பண்ணி மயில் துத்தமும் கூட சேர்த்து ஜமத்தின் சாறு விட்டரைத்து பயறளவு குண்டை பண்ணி சர்க்கரையில் கொள்ள பத்தியம். சீதள சுரம் போம்.

பிள்ளைகளுக்கு ஏடி புறப்பட்டால் மழி முட்டாளும் கறம்பு சிலந்தி:-

அதிமதுரம் அரைத்து உள்ளுக்குக் கொடுக்கவும். காசுக் கட்டி, களிப்பாக்கு, குத்தம், துருசு, எலுமிச்சம் பழம் சார் விட்டு பாரையெ காய விட்டு உரைத்து புண்ணின் மேல் போடவும்.

வெள்ளைக்கு எண்ணெய்:-

நிலக் குமிழம் பட்டை பலம்.க, நன்னாரி வேர் பலம்.க, மணத்தக்காளி வேர் பலம்.க, மொடக்கொத்தான் சார் படி. சுக்கு பலம்.க, லவங்கப் பட்டை பலம்.க ஏலரிசி பலம்.க, சுக்கு நல்ல சீரகம் பலம்.க, வெங்காயம் பலம்.கஉ, சமானமாய் சேர்த்து சட்டியில் வடித்துக் கொள்ளவும். இச்சா பத்தியம். இப்படி. நா:

*இடையில் உள்ளன வேறு செய்தி கூறுவன விடப்பட்டன.*

குஷ்டத்திற்கு எண்ணெய்:-

ஆவாரை இலையில் முத்து வேக வைத்து காய விட்டு தண்ணீரில் ஊத்தி பசும் பால் வார்த்து எண்ணை எரிக்கவும். பித்த குடு மேகமெல்லாம் தீரும்.

சுவாசத்துக்கு:-

ஆடாதொடை பட்டை பலம்.க, சுக்கு பலம்.க, கசாயம் வைத்து கல்கண்டு போட்டு கொடுக்கவும் தீரும். ஆதுலேளை பழம் அக்கலகாரம், அரிசி, திப்பிலி ஆள் வகுளா பறனி தேனில் கொள்ளவும்.
(வேறு) வெங்காரம் பொடியும் தாளகமும் குகைக்குள் விட்டு புடம் செய்ய பற்பமாம்.

சுவாச காசத்துக்கு லேகியம்:-

ஆடாதோடை பட்டை, பூனைக் காசசருக்கு பட்டை, ஆதுவளை பட்டை, முசுமுசுக்கை வேர் பட்டை, தேனில் நெய் லேகியம் ஆத்து முளி விரை கல்கண்டு படுக்கும் போது ஓ அ ஊ அ இது சொல்வது குளிகை அரைக்கும் போது சொல்வது நமாம சிவ சிவ ரு ரு ஸ்ரீங்கார ஓங்கார நமசிவாயா நமா இது சொல்வது வங்கு சிங்கு வருவாயா நமா. அகஸ்தியர் சாபம் நிவாறணை யாசுவாகா, அகஸ்தியர் சாபம் நிவாறணையாக

விஷ்ணு சக்கர குளிகை:-

சூதி வீந்த காறம் லிங்கம் ஆன சத்தி நாவியும்
சோதி மூலபற்பமும் தாக்கு காந்தம் மனோசிலை
நீதி நல் பழ சாத்தரை நெருங் குண்டி நேரிடு
பாரி சத்தியா யிருந்த பாரளந்தார் சக்கரத்தி
லோர் மணி தனித்திடு கடுகுடன் மிக்க தேமயிர்சி வீரில்
விட்டு வீறரைத்திடு பக்க வாய்வு விக்கல் சத்தி பத்து முண்டு
சன்னியம் தற்க் காச்சல் மிக்க சுவாசம் சகல வாய்வு அகலுமே.

<u>அமுதாதி குளிகை</u>:-

அருளினால் அமுர்த மென்னுங் குளிகை தன்னைச் சொல்லக் கேளும்: அதிமதுரம், சென்பகப் பூ, லவங்கமோடு, திருபருந்த கோரோசனை சாதிர பேதி, சேர்ந்த வெட்டி வேர் கோஷ்டம், மாசி பச்சை, தருவினவே விலாமிச்சவ் வேரு கூட்டி சரி சமனாய் விந்தவுண்டி சாறு விட்டாட்டி குரியதனால் மூலைப் பால் தன்னில் பகைத்து வரும கிராமாந்தம் வாய் நீரில் ஜுரம் எட்டும் தீரும்.

<u>சாம்பிராணி தைலம்</u>:-

சாம்பிராணி பலம்.ரு, கொண்டு வந்து சட்டியில் நடுவில் சானம் வைத்து சுத்திவரப் பொடியை விட்டு சீலை மண் செய்து மேல் சட்டி தண்ணீர் விட்டு அடுப்பில் எரிவிட இந்த தண்ணீர் சுட பார்த்து பதம் இறக்கி பார்க்க திடத்தில் தண்ணீரும் தயிலமும் இருக்கும். முறைவே வாக்கி கொடுக்க சன்னி பதிமூன்றும் தீரும்.

<u>சாம்பிராணி பற்பம்</u>:-

சாம்பிராணி தான் நடு சட்டியில் போட்டு சீலை மண் செய்து எரிய விட்டு எடுத்துப் பார்க்க பற்பமாம். மேல் சட்டியில் இருக்கும் சுரண்டி நெல்க் கனம் தேனில் கொள்ள சன்னி பதிமூன்றும் தீரும்.

<u>சுக பேதிக்கு</u>:-

சுக்கு பலம்.க, கடுக்காய் பலம்.உ, களிப்பாக்கு பலம்.க இந்துப்பு பலம்.க, கசாயம். பஞ்சற குளிகை மகத்து.ரு உஷ்னம் தீரும்.

கப்பூரம் விராகனிடை,உ, சுக்கு, மிளகு, திப்பிலி, பறங்கி பட்டை, ஓரோசானி. ஓமம், நல்ல சீரகம், தெள்ளுட்டு சர்க்கரை, நிலப்பனைக் கிழங்கு இது வெல்லாம் வஸ்திர காயம் பண்ணி தேன் விட்டு அரைக்க கம்பி போலாகும். தேத்தான் கொட்டை பிரமாணம் சொள்ளவும். உஷ்ணம், மேகம் பிடிவாதம் வலி ஊதக வாய்வு தீரும்.

<u>சுரம் அறுபத்தி நாலுக்கும் சன்னி மாத்திரை</u>:-

அத்தி முக வாகனத்தின் சத்துருவை சேர்த்து ஆனை மேல் வருவாரும் தாரும் கூட்டி நத்தியோர் மாரியிடை கிடையே சேர்த்து நந்த கோபாலன் தன் சாத்தாலாட்டி பத்திராய் பயற வாய் சாத்தி உருண்டை சேத்து பாங்குடனே சுர சன்னி தயிரில்லீய உத்தியே மீந்திடவே விச சுரங்கள் போகும். உத்தமனே ஓடி விடும் உதரப் பாரே. பத்திய மில்லை. சகலமும் சேரும்.

பாஷாணம்: வீரம், மிளகு, காசிரம்பை சார்.

<u>சண்டமாருத செந்தூரம்</u>:-

பருதியு மகனை மத்திருப்பா கடல் சூழ் புவி தானலகில் பெருகிய மானிடர்க்கு வந்த போக்கும் வியாதியுந்தான் மகிழ்ந்து அருந்த குரு முனி யோற மனதன்புடன் மானிடர் தன் பிறகே தெருந்தியதோர் அவிழ்தம் சண்டமாருதம் மென்றந்த செந்தூரம் சொன்னாற் வெகு சுருக்கு வெகு தொல்லையதாக வெகு சரக்கு முன்னுள் மூலிக்கைச் சாற் நல்ல முத்தின பட்டை, கசாயம் ஊத்து* வகை அது தன்னால் அரையாமல் அது தாக்கிடும் வெய்யிலில் காயாமல் தானை ஓட்டில் வைத்து அது சந்து வாய் சீலை மண் செய்து மல் புடம் போட்டு காமாலை கன்னற பொக்கிசி காலடி அண்டா போல திடம் போதரும் செந்தூரம் வெகு சீக்கிரம் செய்தொழில் மொறமை பூரம், திசையிடையாம் அதில் போட்டிடும் லிங்கம் வினையிடையாம் வீரம் வினையிடையாம். அதில் மேவிய கெந்தி நிடை செந்தூரம் நிடையில் செந்தூரம் நிடையா அதில் சேர்ந்த சரக்கு அயிந்தையும் சுத்தி செய்து அறளுக்கனை வகைங்கு முன் அம்மியிலிட்டு இரு சாம வறன்ன பவள நிறம் அது வந்திடும் வந்தன் மனங் குளிர சொர்ணம் இதுக்கீடோ வெகு தொக்கித்து தொக்கித்து சொல்லுகிறேன் பிரமாண உண்டிடை அன்பாய் போத்தி நவ குணம் மனமுருதியாய் காணு மென்று சொல்லி தாக்கும் பணவிடை செந்தூரம் நடுவாயி புனவெல்லத்தில் வைத்து நாவில் படாமல் முழுங்கி விட பருபாவி வியாதியெல்லாம் பின்னும் பாருமல் ஓடும். பருத்தரைகள் சன்னி பதிமூன்றும் அதில் தாக்கிடும்

பிலி சுரங்கள் எட்டும் பேகு.

விரைவாதம் அதில் ஒத்தல் முடக்கு நடுக்குடன் அசதிகளும் வாதம் புள்ளை கிறந்தி வெடி சூலை, கண்டமகில் மாலைகளும், நல்ல கறைகின்ற குன்மம் கை கால் முடைச்சல அரபானம் மருந்து தெரியாமல் செய்தால் நல்ல தீட்டும் வியாதிக்கு என்று செய்வேறுத் தேலு தானே.

கற்பூர வள்ளி சாற் விட்டுவெடத்தேரி வேர் தூள் சரியிடை கட்ட பத்தியம் இல்லை. தேங்காய் பால் கொள்ள கருவேலம் பட்டை சாற் கொப்பளிக்க.

23.2.63.

<u>கெந்தக சூரணம்:-</u>

சுத்தி பண்ணின கெந்தகம் பலம்.க, சுக்கு பலம்.க, தானிக்காய் பலம்.க, நெல்லிமுள்ளி பலம்.க, கடுககாய் பலம். பச்ச கடலை பலம்.க, சர்க்கரை பலம்.உய வஸ்திர காயம் பண்ணி நெய்யில் தேனில் கொள்ள பத்தியம். தயிரும், நெய், பருப்பு, ஆட்டுக் கரி கூட்டிக் கொள்ள உப்பு வருப்பு மேகம் கருமேகம் செம்மேகம், சிறங்கு, சூலை, சன்னி முதல் கொண்டு தீரும். நாள் யக நாள். உள நாள்.

<u>வாகறுச்சுத லேகியம் செய்ய:-</u>

அலக்கியின்னங் கொபி சாரு நாழி அதின் நடுவே கெம்பிற பழச் சாற் நாழி
வுலக்கு சிற வெள்ளுள்ளி தன் சாற நாழி கொடியை வீச்சி வெள்ளெச்சி சாற
சலம் பிறவே காச்சி யதை நாலொன்றுக்கி சாதிக்காய் காயமது குதம் கூட்டி
நலமுடைய கெந்தியுடன் யிந்துப்பு சேர்ந்து நாய்க் கடுகு மோதகமும் கடுகு
கொள்வேன்.

கொள்ளவது மொளவும் மஞ்சள், குக்கி வாளம் குணமாக சுத்தி பண்ணிக் கூட்டிக் கெள்ளும் உள்ளபடி பழம் புளி போல் பதமே யாக்சி ஞா விளாம் பழம் போல பதமெ உன்ன உள்ளபடி குன்மம் எட்டும் சூலை வாதம் வுதிறமொடு பெருவயறும் ஓடும் தானே

ஓடுமடா வுஊனமுடன் வுடலில் வாதம் ஒரு கோடி ரகங்கள் வுதிர்ந்து போமே
போகுமே பத்தியமது ஐகறக் கேளும் வுச்சித மாபில மரிந்து சகலம் சேரும்
யிந்தபடி மண்டலந்தான் ஆனபோது ஒறத்து தொடா காயமது ஒன்றும் பாரு

ஓமம் பலம்.ந, நத்தை சுண்டி இது இரண்டும் அரைத்து எருமை தயிரில் கொள்ள பத்தியம். பசமறிந்து மண்டலங் கொள்ளவும். இது கை கண்டது.

<u>பூசின்ற பேதி:-</u>

ரசம் விராகனிடை.உ, கெந்தகம் விராகனிடை.ச நேர்வாளம் விராகனிடை.ரு, காட்டாமணக்கன் விரை விராகனிடை.உ, சித்தாமணக்கன் விரை விராகனிடை.ந, இது வெல்லாம் தேங்காய் பால் விட்டரைத்து முத்தின தேங்காய் திருவி போட்டு அதனுல் அடைத்து எட்டு நாள் வைத்து உடைத்து அரைத்து வெங்கல பாத்திரத்தில் யிட்டு வெய்யி லுக்கு திருக காய்ச்சி வைக்க தயிலம் விழும். அந்த தயிலத்வத வைத்துக் கொண்டு பூசின்றில் தடவி முகர பேதியாம்.

<u>பூசினிக்காயி காயிலம்:-</u>

நாமப்பா என்னை படி முக்கால் வாங்கி நலமான சின்னி சாற் கூந்தல் சாரே
காருன செருப்படை சாற் கரு நொச்சி சாற் சமஸ்தான சிலந்தி நாயகன் பண்டு சாறு
வாருன சங்கம் சாற் சாட்டறணையின் சாற் வளமான வெள்ளருகு சாறும் கூட்டு
நாருன இது வெல்லாம் கூட்டி செரு நலமான வகைக்கு படி கால் தான் கூட்டு
ஆருன சர்க்கரைவச் சொல்லக் கேளும் அப்பனே சீரகந்தான் திறன்டு கூட்டு.

கூட்டடா கடுகுரோகணியுங் கூட்டுகுறுன வாத கறப்பான் பட்டை கூட்டு
வாட்டமா கண்டங் கத்திரியும் வளமான அன்னெரிஞ்சி பூண்டு கூட்டு
காட்டவே பாடக அறத்தை சுக்கு கன்மான பறங்கி சக்கை குமளான் வேரும்
நாட்டவே யிது வெல்லாம் ஞா ளாய் பண்ணி நலமான வகைக்கு அரை பலமும் சேரே.

குத்தி எண்ணெ:-

சேரடா எண்ணெ தனில் கலக்கிக் கொண்டு சிறப்பான வேர்னாளம் பலம் அரைதான் பொடித்
தப் போடு
வாட்டடா நீர் சுண்டக் காய்ச்சிக் கொண்டு வலமாக கறண்டி நிறை நாற்பது நாள் கொள்ளு
சொல்லடா பத்தியந்தான் இச்சா பத்தியம் நலமானக் கொண்டு விட ஸ்ரீ நோய்க்கே.

கேளப்பா வீக்கமுடன் கொள்ளி சுட்டான் சூரியான வக்கிலெட்டும் கறப்பான்.
ஆளப்பா லிங்க புத்து யோனிப் புத்து அய்யனே கிறந்தி வலி கொருக்காய் புண்ணது
நாளப்பா பித்தக்கால் எழுந்ததெல்லாம் நலமான வெடி கிறந்தி யிது வெல்லாம் போமே.

இலித்தி எண்ணெய்:-

வெங்காயம் படி, சாற் எலுமிச்சம் பழம் சாற் படி.வ, ஆலின் பால் படி.வ, பசு முன்னே சாற் படி.வ, மணத்தக்காளி சாற் படி.வ, குமரிச் சாற் படி.வ, இள நீர் படி.வ, கொத்தமல்லி பலம்.க, சீரகம் பலம்.க, மிளகு பலம்.க, சாதிக்காய் பலம்.க, பனம் கல்கண்டு பலம்.க, சுக்கு பலம்.க, விளக்கெண்ணெ படி.க, மெழுகு பதம். இச்சா பத்தியம். கை கண்டது. கத்தாழை சோத்தில் கடுக்காய் அளவு போட தண்ணீராம். இப்படி செய்து ஊட்டுக்காக கொடுக்கவும். இச்சா பத்தியம்.

நாடி பிடிக்க சொல்லுவது:-

சித்திரை வையாசிக்கும் செங்கதி நிதையந் தன்னில்
வுத்ததோர் ஆனி மாதம் அற்பசி கார்த்திகைக்கும்
மத்தியானத்தில் பார்க்க மாகழி தை மாசிக்கும்
வித்த கன்கதிரோன் மேற்கே விழுகின்ற நேரந்தானே

தானது பங்குனிக்கும் தனது தனல் ஆவணிக்கும்
வானமா புரட்டாசிக்கும் அற்த்த ரூத்திரியில் பார்க்க
கோன்சும் நாடி முன்சும் தெளியவே காரு மென்று
கானமா முனிவோர் சொன்னார். கைமுறை. வேக அ லே.

அகஸ்தியர் குழம்பு:-

பெருங்காயம், கடுகு, இந்துப்பு, ரசம், பொரிகாரம், ம ஞ்சிலே, திப்பிலி அரிதாரம், ம***கு*சி*லை*** கடுகுரோகணி, கருஞ்சீரகம், வாளம், பச்சை வாளம் இது குழம்பு செய்யறது.
சாம்பிராணி தைலம் தேன் பற்பம்:-

சாம்பிராணி தைலம்:-

அரை படி அள் கொண்டு சட்டியில் நடுப்புற வைத்து சாணம் வைத்து அதின் மேலே திக்கம் வைத்து இந்கள் சுத்தி போட்டு சீலை மண் செய்து புடமிட தயிலமாம். இந்த அள் சட்டியில் போட்டு சீலை மண் செய்து புடமிட்டு மேல் சட்டி பருமப் பற்பமாம்.

சன்னி சுரத்துக்கு:-

கெந்தப் மாந்தே, வெள்ளப் பாஷாணம், வீரம், மிளகு, காசிதும்பை, சாற் விட்டரைத்து மிளகு பிரமாணம் உருண்டை செய்து கொள்ள தேன் அநுபானம். சன்னி சுரம் போகும். திப்பிலி காயிவாளம், பெருங்காயம், கடுகுரோகணி, துளசி சார், முசுமுசுக்கை, சாற்பாலை சாற் அரைத்து உருண்டை செய்து நல்ல தண்ணீரில் கொள்ள மாந்தம் போம்.

மேகத் தென்னே:-

புண் மேகம், சொரி மேகம், படற் மேகம், கனி மேகம் இதுகளுக்கு மேல் தா ப எண்ணெ:-

பிறம்மருக காசி சாற் படி.க, நல்லெண்ணெ படி.க, இதில் கஸ்தூரி மஞ்சள் கார்போக அரிசி அரைத்து இறக்கிற பதத்தில் போட்டுக் காய்ச்சி எடுத்து உடம்பெல்லாம்

தலையில் இட்டு சீக்காய் அரைத்து தேய்த்து குளிக்க மோருஞ் சாதமும் சாப்பிட மேல் கொண்ட மேகம் சிறங்கு, கரப்பான், முதலானதும் தீரும். உள்ளுக்கு கொடுக்க விளக் கெண்ணெயில் இந்த சாறு விட்டு எரித்துக் கொடுக்க மட்டு மட்டாக் கொடுக்க தயிர் நெய் மோர் சேர்த்துக் கொள்ள மேகம் தீரும்.

மேகத்திற்கு :- -

கலியான பூசனிக்காய் கொண்டு வந்து சோறு எடுத்து அதில் சிறு லவங்கப் பட்டை கசகசாபான உப்பு வெல்லம் இது நாள் செய்து ஆக்கிக் கடைந்து உப்பு போடாமல் சாப்பிட மேகம் மேக வாய்வு ருடுகள் தனியும்.

மேக ருடு தனிய :-

செம்பருத்தியிலை குத்து பிழிந்து வந்து நீச்சத் தண்ணீரில் காய்ச்சி ஒரு மண்டலம் கொள்ள மேக ருடு பித்த ருடு தனியும். இச்சா பத்தியம்.

* இடையில் சில ஏடுகள் வேறு செய்தி கூறுவன பிரதி செய்யாமல் விடப் பட்டன.

பேய் நாய் கடிக்கு : பேய் நரி கடிக்கு :-

புளித்தொல் சுட்டுக் கொண்டு வந்து வெல்லமும் மஞ்சளும் ஊமத்தையிலை சாறு வார்த்தரைத்து பின்னைக் காயளவு கொடுக்கவும். இருபது பானை தண்ணீர் தலையில் விடவும்.

இதுக்கு மந்திரம் :- ஆண் நாயும், பெண்ணும் கடிச்சபடி பாரீர் நாச்சியாரும் நாயகனும் இழந்தபடி பாரீர் குகி குகி சுவாமி யானை குகி சுவாகா. கடிச்சவுடனே கடிச்ச வாய்க்கு செம்புத் தகடு வைத்து தட்டு துக்காணியாவதும் வைத்து கட்டவும் இது தீரும்.

பெரும் பாட்டுக்கு மருந்து :-

கத்தரிக்காய் கொண்டு வந்து குடல் விரையெல்லாம் வாங்கிப் போட்டு அதுக்குள்ளே தேங்காய் திருவி அது மேலே சீரகம், மிளகு வைத்து வேகப் போட்டு எடுத்து தின்னவும் குணமாம்.

உடை வாளைக்கு மருந்து :-

ஆகாச கெருடன் கிழங்கு கொண்டு வந்து பெருங்காயமும் வசம்பும் கொண்டு வந்து தண்ணீர் விட்டு அரைத்து வீக்கத்தில் பூசவும் தீரும். செம்போத்து எச்சம் சோற்றுடன் பிசைந்து இட சோழி சாரும்.

நேத்திர வாய்வுக்கு மருந்து :-

வெள்ளெருக்கம் பால் சீலையில் எழு தரம் பிடிச்சு காய வைத்து வத்தியாக்கி எருமை நெய்யில் நனைச்சு வத்தி பண்ணி விளக்கேத்தி புது ஓடு கவிழ்த்தால் மையாகும். அந்த மையை எடுத்து கண்ணுக்கு இட நேத்திர வாய்வு கண்ணி முட்டுகிறது நிற்கும்.

கிராணி மருந்து :-

கோடாசாலை திருமூலம் கொண்டு வந்து தண்ணீர் வார்த்தரைத்து எண்ணெயில் குழைத்து வீழும் மேலும் வெண்ணை தடவி முழுகவும். மோரு குடிக்கவும். தயிர் வார்த் துண்ணவும். ஆவாரம் வேர்ப் பட்டை கொண்டு வந்து தயிர் வார்த்து அரைத்து தப்ப குழம்பாய் அதுக்கு மந்திரம் சொல்லி கொடுக்கவும். கிராணிக் கழிச்சல் நிற்கும். ஓம் நமோ பகவதி புவனேஸ்வரி லட்சுமி அவதாரி ருத்ரசதாரி அவதாரி ருத்ர உத சதிஷ் சதிட பிட கிரகணி விகாரணி சருவகி அலி விதம் பலி கிலி கிலி சுவாகா இந்தப்படி மூன்று தரம் சொல்லிக் கொடுக்கவும்.

நீரழிவுக்கு மருந்து :-

தண்டு சிவந்த நாயுருவியும் சிவந்த சிறுகீரையும் பசுவின் பாலுடனே கொடுக்க [illegible] கொண்டு வந்து அரைத்து மூன்று நாள் கொடுக்கவும்.

வாழை வெட்டி போட்டு அடி தண்ணீர் கொண்டு வந்து குறுவருகு அரிசியும் பழம் புண்ணுக்கும். பொன்னுங்கண்ணியும் கொண்டு வந்து புட்டாகப் பண்ணி பசுவின் நெய் வார்த்து பிசைந்து தின்னவும் தீரும்.

ஆண்_கடுப்புக்கு_மருந்து:-

எருமைத் தயிரில் கருவேலம் பட்டை நறுக்கி பிசைந்து கொடுக்கவும் குணமாகும்.

பூனை வணங்கி வேர் கொண்டு வந்து தீ வாட்டி காய்ந்த வாக்கிலே பிடிக்கவும் ஏக்கம் வரும்.

வயிறு_இருமலுக்கு:-

வெள்ளரி விதையும் எலிப் புழுக்கையும் அரைத்து நீர் வயிற்றில் தடவ குணமாகும். சதிரக் கள்ளி காப்பு கட்டுகிறதுக்கு திங்கள் கிழமை நாள் காப்பு கட்டி செவ்வாய் கிழமை நாள் தூபம் கொடுத்து அந்த சதிரக் கள்ளி வேர் பிடுங்கி வந்து நாழி பட்டை பொடியாக்கி இரு விரல் பிரமாணம் வெள்ளாட்டு நெய்யில் குழைத்து முழுங்க பீனச இருமல் தீரும். ஏழு நாளில் தீரும்.

வயிற்று_விப்புருதிக்கு_மருந்து:-

முக்கின சாட்டரணைக் கிழங்கு சர்மூலமும் அரைத்து அடையாகத் தட்டி ஓட்டில் காய வைத்து ஈரம் உலர்ந்த பிறகு சிலந்தி மேலே போட்டு அதின் மேலே சீந்தி இலை போட்டு கட்ட தீரும். வயிற்றில் நிலக் கடம்பல் கொண்டு வந்து இள வெந்நீரில் அரைத்து கொடுக்க உடைந்து சீழ் கட்டியாய் விழும். இதுக்கு பத்தியம் கவுச்சு புளியாகாது.

பெரு_வயத்துக்கு_மருந்து:-

இரு நாழி நுணி மஞ்சளும் இரு நாழி கடுக்காயும் இந்த இரண்டும் காய வைத்து இடித்து வஸ்திர காயம் பண்ணி எட்டு நாளைக்கு கொடுக்கத் தீரும்.

பூப்பட்ட_கண்ணுக்கு:-

சிறு புள்ளடியும் முலைப்பாலில் அரைத்து தலைக்கு வார்க்கவும் கண்ணி போடவும்.

பஞ்ச_உன்மத்தத்துக்கு_மருந்து:-

உத்தாமணிக் கொழுந்தும் மிளகும் அரைத்து கொட்டைப் பாக்களவு இப்படி பத்து நாளைக்கு தின்னவும். சிறு தமட்டிக் காயும் சதிரக் கள்ளியும் கல்லுப்பும் ஆடு தின்னாப் பாலையும் எல்லாம் பக்குவத்துடனே புடம் வைத்து காய வைத்து இடித்து வஸ்திர காயம் பண்ணி பத்து நாளைக்கு தின்னுல் சொஸ்தமாம்.

எட்டி_தின்ன_பேர்க்கு:-

பருத்தி வேர் அரைத்துக் கொடுக்க கொல்லை பல்லி பிடுங்கி வந்து பொடி செய்து கொடுக்கவும். சோறு செரிக்கும். நாவல் பட்டை அரைத்து கொடுக்கவும். சுக்கு அரைத்துக் கொடுக்கவும். தாமரை கிழங்கு அரைத்து கொடுக்கவும். ஒரு தலைக்கு பொன்னுங்கண்ணி இலையும் சிறு குமஞ்சான் இலையும் முலைப் பாலில் அரைத்து நசியமிட தானாக பேற்கு துணியில் கட்டி பத்தி பிடிக்கவும். பட்டை புச்சி நரித் தாமரை வேர் பிடுங்கி வந்து வாயிலடக்கிக் கொண்டு மருந்து வைத்து மார்பிலே உரசிடிக்க நோகாது. நரிப் பயத்தன் இலை கொண்டு வந்து லேசு வைத்து நன்றாய் பிசைந்து கருப்புட்டி தின்று போட்டு இந்தச் சாறு குடிக்க வயத்திலிருக்கப் பட்ட பாம்பு விழும். எலி

எலிகடி_இறப்புக்கு_மருந்து:-

குக்கச செவ்வல்க்கிக் கிழங்கு கொண்டு வந்து எருமைத் தயிரில் குழப்பி குடிக்க எலி கடி இறப்பு தீரும்.

கை கால் முடங்கின வாதத்துக்கு:- அருகன் பில்லு சார் நாழி, குப்ப மேனி சார் நாழி,

சதிரக் கள்ளி சாறு நாழி, வேப்பெண்ணை உரி., பசுவின் நெய்.உரி, குங்கிலியம் உரி வெங்காயம் சார் உரி, வசம்பு மிளகு கூடக் கொதிப்பித்து மேலில் பிடிக்கவும் தீரும்.

ஊது_காமாலைக்கு_மருந்து:-

வெப்பாலை பட்டை நீரில் தேய்ச்சு ஆமணக்கெண்ணை உள்ளி வசம்பு புட்டு இந்துப்பு, பெருங்காயம் கூட்டி எண்ணை பண்ணி நக்க முன் சொன்ன வாதம் தீரும். கருப்பட்டு மூத்திரம், வெள்ளுள்ளி மிளகு, மஞ்சள், வெல்லம், நல்லெண்ணை இது வெல்லாம் கலந்து அரைத்து உள்ளுக்குக் கொள்ளக் காமாலை தீரும்.

மருவுக்கு_மருந்து:-

பாம்பு நடந்து போன மண் விநாயகர் கோயில் சன்னதியில் தடவ மருவு போம்.

மயிர்_வளர_மருந்து:-

ஆலான் விழுது மோரில் அரைத்து முழுகவும். முசுமுசுக்கை வேர் பொன்னாங் கண்ணி வேர், நீர்ப்பூலாவேர் இந்த வகை மூன்றும் எலுமிச்சங் காயளவு நீ வெந்நீரில் அரைத்துக் கொள்ளவும்.

பித்தத்துக்கு_மருந்து:-

பிரண்டை வடக்கே போற வேர் பட்டை வெட்டி வந்து குவைக்கு இரு நாழி மோரில் ஊறப் போட்டு மத்த நாள் நாழி மோர் இருத்துக் கொடுக்கவும் பித்தம் தீரும்.

சொத்தை_பல்லுக்கு_மருந்து:-

சாறுவேளை வேர், சதைச்சு நல்லெண்ணையில் பிசறி வலிக்கிற பல்லு மேல் வைத்து தாடையிலும் தடவி மறு பாகமாக காலில் தடவி எதிர் வெய்யிலில் இருக்க புழு புறப்பட்டு விழும்.

நீர்_பாயுகிற_மருந்து:_உள்_காமாலை,_வறகாமாலை_மருந்து:-

இரண்டு படி மிளகு, ஒரு படி சுக்கு, வெள்வெங்காயம், திரி ஒரு படி அரப்பொடி முட்டு ஒரு படி எலுமிச்சம் பழம்.உய, நல்லெண்ணை உழக்கு கரிசிலாங் கண்ணிச் சார்.உ, இது வெல்லாம் பொடியாக்கி எலுமிச்சம் பழத்தில் அடைத்து கலசத்தி இட்டு புதைத்து எட்டு நாள் எடுத்து கொட்டைப் பாக்களவு கொள்ளவும். பதினெரு நாள் கொள்ளவும். கவிச்சு புளிப்பு உப்பு ஆகாது.

சூலைக்கு_மருந்து:-

விபூதி இலைச் சாறு உழக்கு, நல்லெண்ணை உழக்கு இது கலந்து குடிக்கவும். சூலை தீரும்.

தலைப்_புத்துக்கு_மருந்து:-

ஆவாரம் இலை பிட்டிட்டு புண் வாயிலே கட்ட தீரும். பசுவின் கோமியம் குறுணி இடித்து வந்து அடுப்பிலே வைத்து உரியாக காய்ச்சி தலையிட தீரும்.

பசி_தாபத்துக்கு_மருந்து:-

ஒரு வெள்ளைப் பூண்டும் ஒரு க்கும் ஒரு காசு நிறை மிளகும் சாட்டறணை வேர் இதுகளெல்லாம் பத்து அரிசியிலே அரைத்து கூழாய்க் காய்ச்சி குடிக்கவும் மூன்று நாள் இந்தப்படி பண்ணி சாப்பிட்டால் வெகு பசியுண்டாகும்.

காமாலைக்கு:-

வெள்ளைப் பூண்டு மிளகு பலம்.உ, சீரகம் பலம்.உ, கடுக்காய்.உரு, க்கு பலம்.க, அசமதாகம் பலம்.க, கருஞ்சீரகம் பலம். இருங்குங்கிலியம் பலம்.உ அரப்பொடி பலம்.உ, சீரகம், பெருங்காயம் பலம்.வரு இந்த மருந்து எல்லாம்

இடித்து சூரணம் பண்ணி புதுக் கலசத்திலே எலுமிச்சம் பழம் கொண்டு வந்து கீறிலாய் போலே அரிந்து அந்த சூரணத்தை அதிலே விட்டு நல்லெண்ணை விட்டு மூன்று நாள் புதைத்து வைத்து நாலா நாள் எடுத்து காலத்தாலே எடுத்து வேளைக்கு ஒவ்வொரு பழம் கொள்ளவும். புளிப்பு கவுச்சுவுப்பு காயப்பு ஆகாது.

<u>சூலைக்கு மருந்து:-</u>

நரிப் பயற்றன் சருமூலம் பிடுங்கி வந்து உரலிலே தவைத்து பசுவின் பாலிலே கலந்து கொடுக்கவும் சூலை தீரும்.

<u>பாண்டுக்கு:-</u>

சர்க்கரை பலம். மிளகு பலம்.௧, திப்பிலி பலம்.௧, சீரகம் பலம். கடுக்காய் பலம். நெல்லிமுள்ளி ஒரு பிடி இது எல்லாம் பொடி செய்து பழங் கிட்டம் தண்ணீரில் ஊறப் போட்டு மத்தா நாள் பொடி செய்து வஸ்திர காயம் பண்ணி கலந்து விட்டு கொண்டு பானையை தோண்டி புதைத்து வைத்து பத்து நாளைக்கு பிறகு எடுத்து நாள் ஒன்றுக்கு மூன்று விரல் கொண்ட பிரமாணம் கொள்ளவும். இரண்டு வேளையும் உய நாள் கொள்ளவும். கவுச்சி, புளி, புகை தள்ளவும்.

<u>உள் மூலத்துக்கு:-</u>

முள்ளங்கி கிழங்கு அரைத்து வெரு வயத்தில் ஒரு மண்டலம் முழுங்கவும். கருகிலிக் கொழுந்தும் அரிசியும் அரைத்து எண்ணெயில் அடை சுட்டு தின்னவும். உள் மூலம் வியாதி போகும். இது கை கண்டது. இதுவே வாகடம்.

*********

முற்றும்

*********

க.ச: 23.2.63.

276